811

ஸம்புடம் 11 }
ஸஞ்சிகை 3 }

ஸ்ரீ:

{ கர-௵
{ பங்குனி ௴

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

ஸம்பாதகர்
P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M. A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

தனிப்ரதி விலை 0-4-0

{ MARCH 1952
{ VOL 11 NO 3.

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி,]	...	44
2. பெரிய திருமொழி [ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சனசார்யர், ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]	...	47
3. மாலை மாற்றல் [ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வோகேட், சென்னை.]	...	51
4. உபயவேதாந்த ஐககண்ட்யம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L. அட்வோகேட், திருச்சி.]	...	53
5. ஸுமுகன் [ஸ்ரீவத்ஸன்]	...	56
6. ஸதுபதேசம் [ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]	...	59
7. அறிந்த வானந்தத்தை அன்பர்க்கருளும் ஆலிநாடன் [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]		63
8. செய்திகள்	...	65
9. பஞ்சாங்க ஸங்க்ரஹம்	...	66
10. சாஸ்த்ராநுபந்தம் (1) சாரீரகமும் சரணாகதியும் (2) ஸௌஜந்ய பரிமளம்		

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } கர ௵ பங்குனி௴ { ஸஞ்சிகை 3

'அஹோபிலே காருடஸைலமத்யே

க்ருபாவஸாத் கல்பிதஸந்நிதாநம் |

லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்

லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஸரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |

ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸம்ஸாரத்தை ஆசீவிஷஸர்ப்பமென்பர். 'ஸம்ஸாரஹேரி ... விஷ... ' என்று ஸ்ரீபாகவத முடிவில் ஸம்ஸாரமெனும் ஸர்ப்பத்தால் விஷம் தீண்டப்பட்டு மோஹமூர்ச்சையடைந்திருந்த பரீக்ஷித்தை ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷணம் செய்த சுகக்கிளியைத் துதிக்கையில் ஸம்ஸாரத்தை ஆசீவிஷஸர்ப்பமாக வர்ணித்தார். கருட பஞ்சாசத்தின் 6-வது ச்லோகத்தில் '... ' என்று ஸாதிக்கப்பட்டது. இந்த ப்ரக்ருதி ஸர்ப்பத்தைக்கட்டிப்போட்டு நம்மை அந்த விஷமூர்ச்சையிலிருந்து தெளிவித்து உயிர் தந்து மோக்ஷம் சேர்ப்பிப்பது வேதம், வேதஸ்வரூபியான கருடன். ... பந்நகங்களை (ஸர்ப்பங்களை) பூஷணங்களாகக் கட்டியுள்ளவர். ப்ரக்ருதிப்பாம்பைக் கட்டியடக்கி, அதை ப்ரஹ்மஸ்வபாவமாக, அநுகூலாநந்தஸ்வபாவமாக்கிவைத்திருப்பவர். இது வேதவேதாந்தங்களின் மஹிமை. '... ' என்று பூமவித்யையில் பாடியபடி ப்ரக்ருதியும் ஆநந்தமாகவே அநுபவிக்கப்படுகிறது. மந்தரபர்வதம் வாஸுகியென்னும் கயிற்ருல் கட்டப்பட்டது. மந்தரமலைக்கு வாஸுகிக் சட்டுமட்டும். இவருக்குத் திருவநந்தாழ்வார் கைவளை; பல அங்கங்களிலும் பல ஸர்ப்பங்கள். கருடபஞ்சாசத்தின் 36-வது ச்லோகத்தை நினைக்க வேணும். ... வைகுண்டருக்கு இவர் வசமாயிருப்பதால், ப்ரக்ருதி இவரை பாதிக்கிறதில்லை, இவருக்குத் தன் நிஜஸ்வபாவப்படியே அநுகூலமாகவே இருக்கிறது. வைகுண்டரிவருக்கு வசமாயிருக்கிருரென்றும் பொருள்கொள்ளலாம். அதனுல் அவருக்குப்போல இவருக்கும் ப்ரக்ருதி ஸுசரூபமே, ஹேயமல்ல. தன் வசமான வைகுண்டரை நமக்குக் கொண்டுவருபவர். மந்தரபர்வதத்தை, 'வைகுண்டகமடர்' என்னுர் கூர்மரூபியான பகவான் தாங்கிக்கொண்டிருந்தார். அதுவுந்தவிர பகவானே மற்ருேர் ரூபத்தோடு ஸ்வயமாக மந்தரகிரியைச் சுழற்றிக்கொண்டிருந்தார். இவ்விரண்டையுமவர் செய்யாவிடில் கடல் கடைய முடியாது. இப்படி இரண்டுவிதத்திலும் வைகுண்டருக்கு மந்தரகிரி வசமாக இருந்தது. தாங்கப்பட்டது, சுழற்றப்பட்டது. '... ' இவர் பர்வதாகாரமாயிருக்கிருர். வேதக்கடலை இவரே மத்தாக இருந்து கடைந்து ப்ரஹ்ம ஜ்ஞாநாம்ருதத்தை எடுத்து நமக்களித்து அந்த அம்ருதத்தால் ஸம்ஸார விஷத்தைப்போக்கி, வைகுண்டரிடம் சேர்ப்பிக்கும் மந்தரகிரியான மத்து. '... ' என்ற வேதமந்த்ரத்தை நினைவூட்டுகிறது இந்தத் திருநாமம். மேலும் '...' என்று பக்ஷி பக்ஷங்களுக்குப் பெயர். இவருடைய பக்ஷங்கள் அதிப்ருஹத். 'மதுப்'ப்ரத்யயத்திற்கு, 'பூமா' 'அதிசயம்' என்று பொருள்.

... ॥

கருடனுடைய குழந்தை விளையாட்டுகளை வர்ணிக்கிருர். இது பஞ்சாசத்தில் 11-வது ச்லோகம். ...:--பக்ஷிராஜருடைய, ...-குழந்தை விளையாட்டுச்கள் (வர்ணிக்கப்படுகின்றன.) இந்த விளையாட்டுக்கள் இந்த ஏகபாத்விபூதிக்குள்ளே இவருடைய சுற்றிச்சுற்றி வரும் ப்ரமணங்களுக்கு இந்த விபூதிமுழுவதும் போதவில்லை. மிகச்சிறியதாயிருக்கிறது. '...

ப்ருஹதி-ப்ரஹ்மாண்டம் எத்தனை பெரிய தாயினும் (அதற்குள்ளே) இவர் வேகச்சுற்றல்களுக்கு இடம் போதாமல் திரும்பித்திரும்பி இந்தக் கொஞ்ச இடத்துக்குள்ளேயே சுற்ற வேண்டி இருக்கிறது. 'இவருக்கு அநந்தமான வேதங்கள் ஒருவாறு வாஸகூடாகலாம்' என்று '[illegible]' என்று தண்டகத் தொடக்கத்தில் ஸூசிக்கும் ரஸமிது. ப்ராக்ருதப்ரஹ்மாண்டம் ப்ருஹத்தாயினும் இவராவர்த்தநங்களுக்குப் போதாமல் திரும்பித்திரும்பி உள்ளேயே ஸஞ்சரிக்க வேண்டியிருக்கிறது. [illegible]-கீழே பாதாளம். மேலே ப்ரஹ்மதேவருடைய ஸத்யலோகம். இவ்விரண்டும் இவர் ஸஞ்சாரங்களுக்குப் போதாத அவதிகள். (எல்லைகள்.) இவ்விரண்டு எல்லைகளுக்கும் நடுவுக்குள்ளேதானே இவர் சுற்றிச்சுற்றித் திரும்பித்திரும்பிப்பறக்க வேண்டியிருக்கிறது. [illegible]- ஆசைக்குத்தக்கபடி இடவிஸ்தாரமில்லாமல் வீணே திரும்பித்திரும்பி உள்ளே ஓடிவர வேண்டி இருக்கிறதே என்று [illegible]-வீண் என்பதத்தால் வ்யஞ்ஜநம். அதற்கு மற்றோர் ரஸப்பொருளுமுண்டு. இந்த ஆவர்த்தநங்கள் ச்ரமத்தோடு ஒரு போட்டியில் செய்வதல்ல. கேவலம் குழந்தை விளையாட்டு. ஒரு ஜயோத்கர்ஷம் முதலிய உத்தேச்யமில்லாமல் கேவலம் லீலையாய் அநாயாஸமாய் குழந்தை ஸஞ்சாரங்களே இவை என்றும் பொருள். யாதொரு ஜயம் முதலிய உத்தேசமில்லாமல் '[illegible]' (வெறும்) குழந்தை க்ரீடைகளிலேயே இப்படி அத்புதப் பெருமை. [illegible]- மலைகள் பொடியாகின்றன. (பக்ஷவேகமே போதும் மலையைப்பொடியாக்க. பூமியைத் தாங்கும் மலைகளே இப்பாடு படுகையில் பூமி என்ன பாடுபடும்?) [illegible]-பூமியைவிட்டு ஸமுத்ரங்களின்மேல் பறக்கையில் நான்கு ஸமுத்ரங்களும் கொந்தளித்து இவர் பக்ஷங்களை நனைக்கின்றன. [illegible]-மேலே உயரப் பறக்கையில் நக்ஷத்ரமண்டலம் ஓர் தடங்கலாகிறது. அங்கேயுள்ள நக்ஷத்ரமாலைகள் தெரிகின்றன. மேலே உயரப்போகமுடியாமல் திரும்பவேண்டியிருக்கிறது. நக்ஷத்ர மண்டலத்தை அழிக்க மனமில்லை. ஆவர்த்தநமே நேருகிறது. '[illegible]- தேவர்களின் ஸ்தாநங்கள் ஸங்கடத்துடன் மேலும் கீழுமாய் பூகம்பத்தில் போல் தூக்கிப்போடப்படுகின்றன. '[illegible]' என்பதில் 'க' என்னும் ப்ரத்யயம், இவருக்கு அவை அத்யல்பமென்று ஸூசிப்பது. [illegible]-இப்படி இவருடைய குழந்தை லீலாஸஞ்சாரங்கள் நம்முடைய ஆர்த்தியை- ஸங்கடங்களை—ஸம்ஸார ஆர்த்தியை தூர எறிந்து தள்ளட்டும். பொடியாக்கட்டும். கரைத்து விடட்டும். தெறிக்கச் செய்யட்டும். மலைகள் முதலியதைச் செய்யும் பாட்டையெல்லாம் நம்முடைய ஆர்த்தி விஷயத்தில் செய்யட்டும். அவருடைய அபார பக்ஷவேகம் எங்கள் ஆர்த்தியை தூரப்போக்கட்டும். '[illegible]' என்று 'க்ஷிவ' என்ற மந்த்ரபாதத்தை ரஹஸ்யமாக, கோபநமாக வைக்கிறார். '[illegible]' '[illegible]', '[illegible]', '[illegible]', '[illegible]', '[illegible]' என்று நம்மெல்லோருக்கும் நம்முடைய நிகரற்ற அளவற்ற பாபஸமூஹத்தைப் போக்கிக் கரையேற்ற வேண்டுமென்று பெரியதிருவடியை ப்ரார்த்திக்கிறார். ஆசிரியரிடம் இந்த அபூர்வ மந்த்ரத்தை உபதேசிக்கப்பெற்று, கருடநதீதீரத்தில் ஏகாந்தத்தில் ஜபம் செய்து நாமெல்லோருமுய்யும்படி நமக்காகவும் சேர்த்து இந்த பஞ்சாசத்தைப் பாடி ப்ரார்த்திக்கிறார். '[illegible]

தம் ஶ்ரேயஸே' என்றும் தாம் தொடங்கி, 'தாவேதௌ ஶ்ரேயஸே ... தார்க்ஷ்ய ரூபாவிவ' என்று இத்துதியைப் பரிசீலனை செய்ப வரும் மந்த்ரத்தைப் பரிசீலனை செய்ப வரைப்போல கருடகல்பாவரென்று பாடினார். கருடஸாம்யம் வந்தால் அவருக்குள்ள பகவத்ஸாம்யமும் தானே வரும். 'ரூபா:' என்பதால் 'கருடரைப்போல' வென்றும், அதில் கொஞ்சம் ந்யூநராக இருக்கவேண்டும் என்று ப்ரார்த்தனையின் ஔசித்யம். கருடன் நியமநத்தால் பாடியது இப்பஞ்சாசத்து. கருடவேசமாக, கருடபக்ஷவேகாடம்பரமாய்ச் செல்லுகிறது. 'விநதாநந்தநம் நதயிஷ்யந்' என்றபடி விநதை செல்வப்புதல்வரை நந்தநம் செய்வது இத்துதி. நாகாநந்த நாடகத்தின் முடிவில் 'வைநதேயோ விநீத:' என்று ஜீமூதவாஹநர் கூறினர். 'விநதையின் பிள்ளை விநீதரானார்' என்று அங்கே ஔசித்ய ரஸம். 'ஶோதஸம் விவஷா ஸுநந்ஹரஷீ' என்று லக்ஷ்மணர் ராமனிடம் கூறியது. இவருக்கும் மநுஷ்யரைப்போல் இரண்டே கால்.

ஓர் தண்டகத்தால் இந்த அண்டஜாதனை ப்ரார்த்தனை செய்கிறேன். இவருக்கு ப்ரஹ்மாண்டம் போதவில்லை. இவர் அண்டஜர். ஓர் முட்டைக்குள்ளிருந்து பிறந்த பக்ஷி என்று வேடிக்கை. அண்டஜரை துதிக்க தண்டகம்.

ஶரண்யம் வந்தே— கருடனைத் துதிசெய்கிறேன். 'பஹாநந்தத்தைச்சுரக்கும் உத்கடமான பக்தியைச்சுரக்கும் சுரபியை யளிப்பீராக' என்று முடிவில் ப்ரார்த்திக்கிறார். ஸவிபலவேதநீடாயி ஶாபம்— அநந்தமான வேதங்களும் சேர்ந்து இப்பக்ஷிக்கு ஓர் கூடு. ஶப்தமயமான கூடு. அசரீரமான கூடு. ஶப்தப்ரஹ்மமயக்கூடு. அலௌகிக கேவல வைதிகக்கூடு. இவர் கழுத்து (அளவற்ற அகுண்டிதமான) வைகுண்டர் வீற்றிருக்கப் பீடமாக மிக்க உத்கண்டிதமாக (ஆசையோடு) காத்திருப்பது. அஸுரரோடு போர்புரியும் ஸந்தர்ப்பத்தில் அவர்களையடக்க, உத்கண்டையோடு கூடிய வைகுண்டர். 'வைகுண்டீய தனு கண்டே ஹவத ... ... ணஹாவம் விஹாய' என்று ஸ்ரீஶங்கராசார்யர் பகவானுடைய கண்டத்திலீடுபட்டதை ஸ்வாமி இங்கே நினைக்கிறார் போலும். வேதத்திற்குள்ளிருப்பது வேதத்தின் தாத்பர்யம். வேதத்தின் கண்டமதை வெளியிடுவதும் வேதத்தின் கண்டமதம். ஹ்ருதயமான நாராயண பரப்ரஹ்மத்தை நம் புத்திக்கு வஹநம் செய்கிறது. வேதமயமான வேததாத்பர்யமான கருடருக்கு இங்கே மங்களாரத்தி நீராஜநம் பாடப்படுகிறது. சுடர்மிகு சுருதிக்கு மங்கள தீபாரத்தி. வேதமயமான இக் கருடர் எங்கும் காந்திவெள்ளம் சூழ்ந்தவர். 'சாந்திகல்லோல நீராஜிதர்' இவர். சுருதி சுடர் மிக்கதே. அச்சுடர் இவரைச் சூழ்ந்து அலைக்கிறது. இவருக்கு ஆரத்தி, மங்கள தீபங்களேது? இவரங்கங்களில் கட்டியுள்ள ஸர்ப்பங்களின் சிரோரத்நதீபங்கள். பயத்தால் ஸர்ப்பங்கள் ஒடுங்கியல்லவோ கிடக்கும். படங்கள் தலை தூக்காதே? வாஸ்தவம்தான். பயநடுக்க ஆட்டத்தில் தலைதூக்கி விரிவதில் ரத்நங்கள் ஜ்வலித்து சூழ்வலம் செய்யும் தீபங்களாகின்றன. என்ன பயநிமித்தம்? ஸ்வநீடாகதிவ்ரீட— இவர் தன் கூடுக்குத் திரும்பி வந்தவுடன் ஸந்தோஷம் பூரித்தது. யாருக்கு? ஶுத்ராஸுகீர்த்தி— இந்தத் திருநாமங்களையுடைய இவ்விரண்டு பத்நிகளுக்கு. அந்த ஹர்ஷோத்ஸவத்திலென்ன நேர்ந்தது? ஸ்தநாபோகமாபோகம்— அவர்களுடைய விஸ்தாரமான இரண்டு ஸ்தநங்களோடு கெட்டியாக அணைந்தார்கள். இரண்டு பத்நிகளுடைய ஸஹஸ்வயம் க்ரஹம். அணைந்தாலென்ன? ஸ்பர்ஶ ஸங்க ஸ்தவபவ்யாபாவோ ஸ— அந்த ஆலிங்கநங்களிலிந்த ஸர்ப்பங்கள் நடுவிலகப்பட்டுள்ளன. கருடன் திருமேனியிலும் புளகங்கள் (மயிர்க்கூச்சு) எடுத்து சிலிர்த்து திருமேனிகள் முழுதும் முட்கள்போல் திடீரென்று கிளம்புகின்றன. இவை முள்போல இந்த ஸர்ப்பங்களைத் திடீரென்று மிக மென்மையான பாம்புடம்பில் குத்துகையில் பாம்புகள் ஆட்டமடைந்தன. ஆலிங்கனத்திற்குப் பீடனமென்றும் வ்யவஹாரம். த்விஜிஹ்வாயிவா ஸ்வ— இப்படி நடுங்கி வருந்தும் இரு நாக்குடைய பாம்புத் தலைவர்களானவர்கள் கருடன் திருமேனிக்கு ஆபரணங்கள். (தொடரும்)

ஸ்ரீ:

பெரியதிருமொழி

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இவர்கள் வருவதைக்கண்டு கலியன் களிகூர்ந்து தமது சீடர்களுடன் வந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டு விலைமதித்தற்கரிய அணிகலன்களுடனும் அந்திபோல்நிறத்தாடையுடனும் விளங்கும் அம்மணவாளப் பிள்ளையைக் கண்டு 'நீவிர் யாவர்? இவ்வழியில் எம்மை மதியாது எங்குச் செல்கின்றீர்? பணிகள் பலவற்றையும் களைந்து கொடுங்கள்' என்று வீராவேஶத்துடன் அவர்களை மறித்திட்டு அவர்கள் அணிந்துள்ள ஆடையாபரணங்களையெல்லாம் களைந்துகொண்டார். அம்மணமகன் தன் காலில் அணிந்துள்ள மோதிரமொன்று மாத்ரம் கழற்றமுடியாதாக, அதனையும் விடாமல் தம் பற்களால் கடித்து இழுத்துப் பெற்றுக்கொண்டார். அவரது மிடுக்கை நோக்கி எம்பெருமான் அப்போது இவர்க்குக் **கலியன்** என்று ஒரு திருநாமம் சாத்தியருளினார். கலியன் தாம் பறித்தபொருளையெல்லாம் ஒரு பேழையிலிட்டுப் பூட்டியெடுத்துக் கொண்டுபோக முயற்சிக்கையில் அது இடம் விட்டுப் பெயராமலிருக்க, மங்கையர்கோன் சீற்றங்கொண்டுமணவாளப்பிள்ளையை நோக்கி, 'நீ என்ன மந்த்ரவாதம்பண்ணினாய்? அதனை யாம்கேட்குமாறு கூறு; இல்லையேல் இவ்வாள் கொண்டு வெட்டுவேன்' என்று தம் கையிற் கொண்டுள்ள வாளாயுதத்தைக் காட்டி அச்சுறுத்த, பரந்தாமன் புன்முறுவல் பூத்து, 'கலியனே சொல்கிறோம், நறும்புனலில் நீராடி வா; மிகத்தூய்மையோடு அம்மந்த்ரத்தைக் கேட்டாலன்றி அது உனக்குப் பலிக்காது' என, பராங்தகன் அவ்வாறே நீராடிப் பன்னிரு திருமண்காப்பணிந்து கேட்க, பவக்கடலைக் கடக்குவிப்பதும், ஆரணப்பொருளை அகத்தடக்கியதும், சொல்வாரது தீவினையைப் போக்கவல்லதுமான திருவஷ்டாக்ஷரத்தை உபதேசித்து ... கருடாரூடனாய்க் காட்சியளித்தான்.

ஆழ்வார் தத்வஜ்ஞானம் பெற்றமை

திருவஷ்டாக்ஷரமந்த்ரபலத்தாலும் பகவத்தர்சநத்தாலும், காலாழிவாங்குவதற்கு அவன் பாதமலரில் வாய் வைத்தமையாலும், கலியன் அஜ்ஞாநாந்தகாரம் நீங்கித் தத்வஜ்ஞானம் உதிக்கப்பெற்று, பகவானைப் பரிபூர்ணாநுபவம் பண்ணி, அவ்வாநந்தம் உள்ளடங்காமல் ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம், என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்ல புலமை பெற்று, *'வாடினேன் வாடி வருந்தினேன்' என்று தொடங்கிப் பாடலுற்றார்.

ஆழ்வார் அருளிச்செய்த மற்றும் சில ப்ரபந்தங்கள்

ருக் யஜுஸ் ஸாம அதர்வண மென்னும் நான்கு வடமொழி வேதங்கட்கும் சிக்ஷை வ்யாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்றும் ஆறங்கங்கள் அமைந்திருப்பன போலவே நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரியதிருவந்தாதி, என்ற நான்கு திவ்யப்ரபந்தங்கட்கும், தமது ப்ரபந்தங்கள் அங்கங்களாக அமையும்படி **பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்** என்றும் ஆறு திவ்யநூல்களைச் செய்தருளித் **திருமங்கையாழ்வார்** எனத் திருநாமம் பெற்றார்.

---

* இது பெரியதிருமொழியின் ஆரம்ப பாசுரம்.

ஆழ்வாரைக்குறித்துக் கூறப்படும்
ஒரு வரலாறு

ஆழ்வார் தென்னாட்டுத் தலங்கள் தோறும் யாத்ரை செய்து பதிகம் பாடிவருகையில், தில்லைத் திருச்சித்ரகூடம் பாடியபின் சீர்காழி (காழிச்சீராமவிண்ணகர் என்னும் ஸ்ரீதாடாளன் ஸந்நிதி) வழியே எழுந்தருளினர். பரிஜநங்கள் வழக்கப்படி, 'ஆலிநாடர் வந்தார், அருள்மாரி வந்தார், நாலுகவிப் பெருமாள் வந்தார்' என்பன முதலாகப் பல விருதுகளைச் சொல்லிக்கொண்டு வந்தனர். அவ்வூரிலுள்ள திருஞானஸம்பந்தமூர்த்தி நாயனரின் அடியார்கள் 'எங்கள் நாயனர் உள்ளவிடத்தில் நீவிர் விருதூதிச் செல்லுதல் கூடாது' எனத்தடுத்தனர். அப்போது பரகாலர், உங்கள் நாயனர் எங்குளர்? எனக் கேட்க, நாயனரது பரிஜநங்கள் அவருள்ள விடத்தைக் காட்ட, அங்குச்சென்று அவரோடு வாதப்போர் செய்யத்தொடங்கினர். அப்போது நாயனர் 'வாதப்போர் நிகழ்த்துவது நிற்க, நும் கவித்திறம் வெளியாம்படி ஒரு பாடல் பாடும்' என்றார், உடனே ஆழ்வார் *ஒரு குறளாய் என்று தொடங்கி காழிச் சீராமவிண்ணகரத்தெம்பெருமான்மீது ப்ரோபதேசமுகத்தால் ஒரு பதிகம் பாட, ஞானஸம்பந்தர் அதிசயித்து, உமக்கு இவ்விருதுகள் யாவும் தகும் தகும்' என்று சொல்லித் தமது வேலாயுதத்தை ஆழ்வார்க்குக் காணிக்கையாக ஸமர்ப்பித்தார். அப்போது தமது கொற்றம் முற்றும் அந்நாயனர் அறியும்படி

'செங்கமலத் தயனனைய மறையோர் காழிச்
சீராம விண்ணகரின் செங்கண் மாலை
அங்கமலத் தடவயல்சூ ழாலி நாடன்
அருள்மாரி யரட்டமுக்கி யடையார் சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன்
கொற்றவேற் பரகாலன் கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங்கடல்சூ ழுலகுக்குத் தலைவர் தாமே'

என்று தமது விருதுகள் அனைத்துங் கூறி அப்பாற் சென்றார்.

ஆழ்வார் அரங்கநகரடைதல்

ஆழ்வார் அங்கு நின்றும் புறப்பட்டுப் பல திருப்பதிகளை மங்களாசாஸநம் பண்ணித் திருப்புகழ்கள் பலவும் பாடித் திருவரங்கம் எழுந்தருளினர். அங்கு அரவணைமேல் அறிதுயில் கொண்டருளும் அழகியமணவாளனைச் சேவித்து ஆநந்தம் உள்ளடங்காமல் அவன் விஷயமாகப் பல பதிகங்கள் பாடினர். அவற்றைச் செவிசாய்த்த அமலன் திருவுள்ளமுவந்து முகமலர்ச்சியோடு 'நுமது கவிகள் அமிழ்தினுமினியன; கேட்டுக் களித்தோம், இனி நமக்கு விமாநம் மண்டபம் கோபுரம் ப்ராகாரம் முதலிய கைங்கர்யங்களைச் செய்யக் கடவீர்' என்று பணித்தருளினன். ஆழ்வார் 'ஓம்' என்றிசைந்து, தமது அமைச்சர் நால்வருடன் 'இதற்கு என்செய்யலாவது? பொருள் இருந்தாலன்றி இம் மஹத்தான கைங்கர்யம் முற்றுறாதே, பொருளீட்ட வழியென்?' என்று அந்தரங்கமாய் ஆலோசிக்கலானர்.

---

* "ஒருகுறளா யிருநிலம் மூவடிமண் வேண்டி
உலகனைத்து மீரடியா லொடிக்கி யொன்றும்
தருகவெனு மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திரள்நான்கும் வேள்வி யைந்தும்
அங்கங்க ளவையாறு மிசைக ளேழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்குங் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே"

புத்தவிக்ரஹத்தைப் பறித்துக்கோணர்ந்து, அதனால் ரங்கவிமானம் முதலியன அமைத்தல்

அமைச்சர்கள், 'அரசே! நாகப்பட்டினம் என்றொரு பட்டினமுளது. அங்குப் பொன் மயமானதொரு புத்தவிக்ரஹம் பௌத்தர்களின் ஆலயத்தில் இருக்கிறது. அதனைக் களவாடிக் கொணர்ந்திடுவோமாயின் இக்கைங்கர்யங்களை நாம் இனிதே நடத்தலாம்' என்றனர். அதுகேட்ட ஆலிநாடர் ஒரு பௌத்தர் வேடம் தாங்கி, ஆடல்மா ஊர்ந்து, தமது பரிவாரங்களோடு நாகப்பட்டினம் அடைந்து, விசித்ர வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ள ஆலயத்தைக் கண்டு அதில் நுழைந்து கோவிலெங்கும் சுற்றிப்பார்த்தார். அதன் சிகரத்தில் ஸதா சுழன்றுகொண்டிருக்கிற சக்ராகாரமான யந்த்ர விசேடம் ஒன்று தென்பட்டது. அச்சுழற்சியை நிறுத்துவதற்குப் பலபடி ஆலோசனை செய்து பல வாழைத்தண்டுகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி அதனிடையே கொடுத்துக்கொண்டுவந்தார். அப்போது அவ்வாழைத்தண்டின் நால் சுற்றிக்கொண்டதனால் அச்சக்ரம் சுழலமுடியாமல் நின்றிட்டது. அப்போது ஆழ்வார் தமது அமைச்சர்களில் ஒருவனை உள்ளே அனுப்பி, அவ்விக்ரஹத்தைப் பெயர்த்துக் கொணருமாறு பணித்தார். அவனும் அரிதில் உள்ளே சென்று அப்பதுமையைப் பெயர்க்கத் தொடங்குகையில் அது மந்த்ரபலத்தால் அவன் கைக்கு அகப்படாமல் அங்குமிங்கும் ஓடத்தொடங்கிற்று. இச்செய்தியை அமைச்சன் ஆழ்வார்க்கு அறிவிக்க, ஆழ்வார் 'அதனை அபரிசுத்தமாக்கிவிடு, அப்போது மந்த்ரசக்தி குன்றி அது உன் கைக்குக் கிடைக்கும்' என்றோர் உபாயம் கூற, அமைச்சன், தான் கொணர்ந்த ஒரு தோல் வடத்தால் அப்பதுமையைப் பிணித்து ஈர்க்க, அப்போது அவ்விக்ரஹம்,

'ஈயத்தா லாகாதோ இரும்பினா லாகாதோ
பூயத்தான் மிக்கதொரு பூதத்தா லாகாதோ
தேயத்தே பித்தளைநற் செம்புகளா லாகாதோ
மாயப்பொன் வேண்டுமோ மதித்தென்னைப்
[பண்ணுகைக்கே'

என்று சொல்லிக்கொண்டே ஓரிடத்தில் விழுந்திட்டது. பின்பு அவ்வமைச்சன் அதனைக் கைப்பற்றி ஆழ்வாரிடம் கொடுக்க, ஆழ்வார் களிப்பின் பெருக்கில் மூழ்கியவராய், அப்பிம்பத்தை உருக்கிப் பொன்னாக்கி விலைப்படுத்தி, அதனைக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் விமாநம் ஸப்தப்ராகாரம் முதலிய தொண்டுகளைச் செய்து முடித்தார். இங்ஙனம் கைங்கர்யங்கள் நிறைவேறப்பெற்ற பின்னர், ஆலிநாடர் அரங்கநகரப்பனிடம் விடைபெற்று வதரி முதலிய வடநாட்டுத் தலங்கள்தோறும் பரமனைப் பாடிப் பெரியதிருமொழியையருளிச் செய்தார்.

அத்யயநோத்ஸவத்தில் தமிழ்வேதபாராயணம்

திருமங்கைமன்னன் பல தலங்களில் எம்பெருமானைத் தரிசித்துப் பதிகம்பாடிப் பின்னர் ஸ்ரீரங்கம் எழுந்தருளினர். அங்குத் திருவரங்கன் திருவோலக்கத்தில் தாம் இயற்றியருளிய திருநெடுந்தாண்டகத்தைத் தேவகாநத்திற்பாட, அரங்கன் திருவுள்ளமிரங்கி, 'அன்ப! உளமகிழ்ந்தோம்; உனக்கு வேண்டும் வரங்கேள்; தருகிறோம்' என்று நியமிக்க, அப்போது ஆலிநாடர் 'ஐயனே! முன்பு தேவரீர் நம்மாழ்வார் முகமாக வெளிப்படுத்திய தமிழ் வேதங்கள் நான்கையும், மார்கழி மாதத்தில் தேவரீர் கண்டருளுகிற அத்யயநோத்ஸவத்தில் வடமொழி வேதங்களோடு பாராயணம் செய்யுமாறு நியமித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, அரவணையப்பனும் அங்ஙனமே அருள்புரிந்தார். நம்பெருமாள் நியமித்தபடியே நம் ஆலிநாடர் திருக்குருகூர்க்கு எழுந்தருளி, அங்கு அர்ச்சாவிக்ரஹரூபமாய் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாரை ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து, உபய வேதாந்தபாராயணத்தையும் ஒழுங்காகச் செய்வித்து, அது முடிந்ததும், ஆழ்வாரை மீண்டும் ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளப்பண்ணுவித்தார். அன்றியும் ஆண்டுதோறும் அவ்

விழாவை அங்ஙனமே செய்து வரும்படி கட்டளையிட்டார்.

ஆழ்வாருடைய பரமபதப்ராப்தி

மங்கையர் கோமான் மஹேந்த்ரகிரிக்கு அடுத்து ஸித்தாச்ரமமென்று சொல்லப்படும் திருக்குறுங்குடியில் நம்பி எம்பெருமானுடைய திருவடியில் பக்திபண்ணிக்கொண்டு நிரந்தர வாஸம் செய்யவேண்டுமென்று திருவுள்ளத் தோற்றமுண்டாய், அவ்வாறே அத்திவ்யதேசத்தில் யோகநிஷ்டையில் எழுந்தருளியிருந்து தமது 105ம் பிராயத்தில் 'ஸமாதி' யென்னும் மஹாயோகத்தால் திருமேனியை நீத்துப்பரமபதமடைந்தார்.

ஆழ்வாருடைய காலம்

'கலியுகத்தில் 398-ஆவதான நளவருஷ கார்த்திகைமீ பௌர்ணமி திதி பொருந்திய க்ருத்திகா நக்ஷத்ரத்தில்' என்று குருபரம்பரை நூல் கூறுகிறது. இப்போது நடக்கின்ற கலியப்தம் 5052. ஆகவே குருபரம்பரை நூற்கணக்குப்படி இவ்வாழ்வார் காலம் இன்றைக்குச் சற்றேறக்குறைய 4654-வர்ஷங்களுக்கு முன் என்று தெறுகிறது. இவர் பல்லவ அரசனாகிய மூன்றும் நந்திவர்மனையும் பல்லவராயனையும் கோச்செங்கட் சோழனையும் தமது திருமொழியிற் குறித்திருப்பதால், இவர் அவர்கள் காலத்தவராயிருக்கவேண்டுமென்று சரித்ர ஆராய்ச்சியாளர் நிச்சயித்து, இவர் காலம் எட்டாம் நூற்றாண்டாக இருக்கலாமென்கின்றனர். [நந்திவர்மன் ஆட்சிக்காலம் கி. பி. 780-830]

ஆழ்வார் இயற்றிய அருளிச்செயலின் சிறப்பை

நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம்தமிழ் நன்னூல்துறைகள்
அஞ்சுக் கிலக்கிய மாரணசாரம் பரசமய
பஞ்சுக்கனலின் பொறி பரகாலன் பனுவல்களே

என்ற கூரத்தாழ்வான் அருளிய பாசுரத்தால் அறியலாம். இவ்வாழ்வாரின் ஒப்புயர்வற்ற அருளிச்செயலின் இத்தன்மைகளே ஸ்வாமி தேசிகனுடைய அருளிச்செயலுக்கும் வாய்ந்திருத்தலால்தான் 'கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே' என்று ஒரு வாழித்திருநாமத்தை ஸ்ரீதேசிகனுக்கு அபியுக்தர்கள் ஸமர்ப்பித்தார்கள்போலும்!

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

மணியார்டர் பாரத்தில் கூபனின் பின்புறத்தில் பணம் அனுப்புவோரின் விலாஸத்தை எழுத இடம் விடப்பட்டிருக்கிறது. ஆயினும் பல சந்தாதாரர்கள் அதில் தங்கள் விலாஸத்தை எழுதுவதில்லை. இதனால் பணம் அனுப்பியது யாரென்று தெரிந்துகொள்ளமுடியாமல் போகிறது. கூபனின் பின்புறத்தில் ஸரியான முறையில் முழுவிலாஸத்தையும் எழுதினால் எங்களிடமுள்ள விலாஸத்தையும் அதன்படி திருத்திக்கொள்ள ஸௌகரியமுண்டு. மணியார்டர் பாரத்தின் முன்புறத்தில் விலாஸம் எழுதப்பெற்ற பாகம் தபாலாபீஸுக்கே போய்விடுவதால் கூபனின் பின்புறத்தில் விலாஸத்தை எழுதவேண்டியது மிக அவசியம். ஆகையால் சந்தாதாரர்கள் மறவாமல் கூபனில் தங்கள் சந்தா நம்பரையும் அதன் பின்புறத்தில் தங்கள் முழுவிலாஸத்தையும் எழுதியனுப்பவேண்டுமெனக் கோருகிறோம்.

மானேஜர்

ஸ்ரீ:

மாலை மாற்றல்

மாமலராள் புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதொறும் வருஷத்திற்கிரு முறை ஆண்டாள் திருக்கல்யாண மஹோத்ஸவம் நடைபெறுகிறது. அதற்கு அங்கமாக மாலைமாற்றல் கண்டருளுவார்கள் பெருமாளும் ஆண்டாளும். சில க்ஷேத்ரங்களில் பங்குனி உத்திரத் திருக்கல்யாணத்திற்கு அங்கமாகப் பெருமாளுக்கும் பெரியபிராட்டியாருக்குமே மாலைமாற்றல் நிகழும். எப்படியிருப்பினும் பெரியபிராட்டி திருக்கல்யாணத்திற்கும் ஆண்டாள் திருக்கல்யாணத்திற்கும் அருகிலிருந்து அநுபவிக்கும் அன்பர்கள் உள்ளத்தில் வாசி தோன்றாமற்போகாது. பெரியபிராட்டியார் திருக்கல்யாணமஹோத்ஸவம் நமது மாதா பிதாக்களுக்கு ஷஷ்ட்யப்தபூர்த்தி விழா நடத்தும்போது ஏற்படும் உணர்ச்சிகளை நம்முள்ளத்தில் எழுவிக்கும். கோதையின் திருக்கல்யாணமோ நமக்கே விவாஹமாகும்போது உண்டாகும் உணர்ச்சிகளையும் அநுபவங்களையும் நினைப்பூட்டும். பாரதந்த்ர்யாதி குணங்களால் ஜீவாத்மாக்கள் அனைவருமே ஸ்த்ரீப்ராயர்கள். பரமபுருஷனைக் கணவனாக அடைய ஆசைப்படவேண்டியவர்கள். அவர்கள் நிலையில்நின்று அவர்களுக்கெல்லாம் ப்ரதிநிதியாய் ஆண்டாள் ஆண்டவனை மணம்புரிகிறாளாகையால் அந்தத் திருக்கல்யாணத்தை ஸேவிப்பவர்கள் தங்கள் தங்களுக்கு விவாஹம் நடந்தேறும்போது அடையும் ஆநந்தத்தையடைவது ஸஹஜமே. அப்படியே லோகபிதாவுக்கும் ஜகன்மாதாவுக்கும் திருக்கல்யாணமஹோத்ஸவம் நடைபெறும்போது அவர்களது ப்ரஜைகளாகிய நாம் பயபக்தி விச்வாஸங்களோடு அநுபவிப்பதும் யுக்தமே.

ஆண்டாள் திருக்கல்யாணம் வருஷத்திற்கிருமுறை நடைபெறும்; திருவாடிப்பூரத்திலும், போகியிலும். ஆடியும், மார்கழியும் இரண்டும் சூந்யமாதங்களென மதிக்கப்படுவன. ஸர்வசூந்யர்களான நம்மையெல்லாம் வாழ்விக்க வல்லமை ஆண்டாளிடத்திருக்கிறது என்று காட்டுகிறது சூந்யமாதங்களை மங்களகரமான மாதங்களாக ஆக்கித்தரும் அவள் திறமை.

இப்படிப்பட்ட ஆண்டாள் திருமண மாலை மாற்றலை ஸ்வாமி தேசிகன் வெகு ரஸமாக அநுபவித்திருக்கிறார் கோதாஸ்துதியில். ஒரு விவாஹத்தில் காணும் பல அம்சங்கள் கோதாஸ்துதியில் காணப்படுகின்றன. மங்களவாத்யம், குடை, மாலைமாற்றல், பாநங்கள்; வழங்கப்படும் விருந்து, பலவித வாஸனைகள், ஏன்? பரிஹாஸமும் ஏச்சும் கூட அங்கங்கே ச்லோகங்களில் காணப்படுவன. அவற்றுளெல்லாம் வெகு அழகாக மாலைமாற்றல் பாராட்டப்பட்டிருக்கிறது. அதற்குத் தனிப்பட ஒரு ச்லோகமமைக்கப்பட்டிருக்கிறது.

ரங்கேச்வரஸ்ய தவ ச ப்ரணயாநுபந்தாத்
அந்யோந்யமால்யபரிவ்ருத்திமபிஷ்டுவந்த: ।
வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ்த்ரிலோகீம்
ந்யூநாதிகத்வஸமதாவிஷயைர்விவா
தை: ॥ (21)

ரங்கநாதனுக்கும் ஆண்டாளுக்கும் இன்பரஸமேலீட்டினால் பரஸ்பர மாலைமாற்றல் நிகழ்கிறதாம். அதை அருகே நின்று ஸேவிக்கும் ரஸிகர்களுக்குள் ஒன்று தாழ்ந்தது ஒன்று உயர்ந்தது இரண்டும் துல்யம் என்று பலவிவாதங்கள் எழுகின்றனவாம். அந்த விவாதரூபமான ஸ்தோத்ரங்களின் ஶப்தத்தால் மூன்று லோகங்களையும் அந்த ரஸிகர்கள் நிரப்பிவிடுகிறார்களாம்.

ஒவ்வொரு மாலையும் இருவர் ஸம்பந்தத்தையும் மாற்றி மாற்றிப்பெறுவதுதானே மாலை மாற்றல். அப்பொழுது அம்மாலைகள் விஷயமாக ஏற்றத்தாழ்வு என்ற வ்யவஹாரங்களுக்கு அவகாசமேது? அதுவும் ரஸிகர்களுக்குள்? ஆகவே வெறும் மாலைகளைமட்டும் திருவுள்ளத்திற்கொண்டு தேசிகன் இந்த ச்லோகத்தை ஸாதித்திருக்கமாட்டார். ஆராயப்புக்கால் உடனே விளங்குகிறது அந்தத் திருவுள்ளத்திலோடும் ஒப்புயர்வற்ற ரஸிக்யம்.

இந்த ச்லோகத்துக்கு முன் ச்லோகம்.

யத்தே ஸ்ருஷ்டஜகதாம் விதாதுருத்தமாங்கே
கசாளிஸௌரபஸுரபாஸுரஸம்பரேண ஹ்ருதய: ।
இந்தீவரஸ்ரஜமிவார்பயஸி க்ஷணாநி
ஶ்ரேணீக்ருதாநி பஹுமாந விலோகிதாநி ॥

தாயே! உமது திருக்குழல் ஸம்பந்தம் பெற்ற மாலையால் சூழப்பெற்றிருப்பதால் தந்யமான ஸர்வலோகத்துக்கும் பிதாவினுடைய சிரஸில் தேவரீர் மறுபடியும் தேவரீருடைய சற்று கோணலாகவுள்ளனவாயும் மிகுந்த பஹுமாநத்தால் ஏற்பட்டனவாயுமுள்ள திருக்கண்பார்வைகளினாலான ஒரு நீலோத்பலமாலையைச் சாற்றுகிறீர்.

இங்கே எதிரே நிற்கும் ப்ரபுவை நாச்சியார் நோக்கும்போது அவரது அன்பும் ஆநந்தமும் நிறைந்த கடாக்ஷங்கள் ஒரு மாலையாகப் பெருமாள் திருக்கழுத்தில் விழுகின்றன என்று ஸ்வாமி தேசிகன் உத்ப்ரேக்ஷிக்கிறார். அடுத்தபடி அதற்குப் பதிலாகப் பெருமாள் தமது திருக்கண்களால் ரஸத்தோடு கடாக்ஷிக்கிறார் என்பது சொல்லாமற் சொல்லப்பட்டிருக்கிறது. நாச்சியார் கடாக்ஷமாலை இந்தீவரஸ்ரஜம் (நீலோத்பலமாலை) என்றால் பெருமாள் கடாக்ஷமாலை ஒரு அரவிந்தஸ்ரஜம் (தாமரை மாலை) ஆகுமன்றோ? அவள் அஸிதாபாங்கை. இவன் அரவிந்தலோசனன். இப்படி ப்ரணயித்வம் மேலிட்டபோது நிகழும் கடாக்ஷமாலை மாற்றல் ஸ்வாமி திருவுள்ளத்தில் நிகழுகிறது. அதைச்சித்திரித்து காட்டுகிறார் மேல் ச்லோகத்தில் 'ரஜேஶ்வரஸ்' என்று ச்லோகம் தொடங்குவது வெகு ரஸம். பிராட்டியின் பஹுமான விலோகநங்களை இந்தீவரஸ்ரஜமென்று பேசி கீழ் ச்லோகம் முடிந்தது. அதன்பேரில் பெருமாள் கமலமாலை பரிவர்த்தனையாகிறது கவிக்குத்தெரிகிறது. அதைக் கொண்டு 'ரஜேஶ்வரஸ்' என்று ஆரம்பித்து மறுபடியும் ப்ரணயம் முதிர மீண்டும் நாச்சியார் மாலை சாற்ற அதை 'தவ' என்று பேசுகிறார். இப்படி பாவம் கொந்தளிக்க ச்லோகம் அமைந்திருக்கிறது. இந்த அந்யோந்யமால்யபரிவர்த்தநமே ரஸிகர்களுக்கு விஷயமாகவல்லது. உலகம் மூன்றும் அவர்கள் வார்த்தைகளால் நிரப்பப்படுகின்றனவாம். வார்த்தைகளோ, விவாதவார்த்தைகள். பெருமாள் கடாக்ஷம் மேற்பட்டது என்பாரும், நாச்சியார் கடாக்ஷத்திற்கு ஒருக்காலும் பெருமாள் கடாக்ஷம் ஸமமாகாது குறைந்ததே என்பாரும், தடஸ்தர்களாயும் ஶாஸ்த்ரவித்துக்களாயுமுள்ளவர்கள் 'துல்யசீலவயோவ்ருத்தாம்' என்று கவிபாடிய திருவடிபோல் 'ஒன்றுக்கொன்று சற்றும் பின்வாங்காது ஸமமாகவுள்ளவைகள் பெருமாளுடையவும் பிராட்டியுடையவும் கடாக்ஷங்கள்' என்பாருமாக மூவுலகையும் ரஸோக்திகளைக்கொண்டு நிரப்பி விடுகிறார்கள். ந்யூநதை, அதிகத்வம் இரண்டும் பூர்வபக்ஷங்கள், அதிவாதங்கள். 'ஸமதா' -இதுவே ஸித்தாந்தம். 'ஶ்ரீமதி யுவாம் உபௌ தைவதம் ந:' என்று முடிவுகட்டிய தேசிகோத்தமன் ஸித்தாந்தம்.

விவாஹத்தில் ஒரு கேளியாக விளங்கும் மால்யபரிவர்த்தநத்தில் வேதாந்த தேசிகன் காணும் வேதாந்தஸாரமிது.

ஸ்ரீ:

உபயவேதாந்த ஐககண்ட்யம்

(11-வது ஸம்புடம் 1-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

—○—

இந்த முதல்பாதத்தின் அதிகரண ஸூத்ரங்களால் பஞ்சாக்நிவித்யையின் ப்ரகாரத்தில் வைராக்யஹேதுவான அநேக விஷயங்கள் ஸூசிக்கப்படுவதாக பாவப்ரகாசிகை ஆரம்பத்தில் விஸ்தரித்துளது. ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியும் அந்த ரஸங்களை எடுத்துக்காட்டி இருக்கிறார். பாவப்ரகாஶிகைக்கு மூலம் தீக்ஷிதரின் பரிமள க்ரந்தம். அவர்களெல்லாம் காட்டாத சில ரஸங்களும் ஆழ்வாரால் இங்கே ஸூசிக்கப்படுகிறது. முதல் ஸூத்ரத்திலேயே, ஒரு தேஹத்தைவிட்டுவிட்டு மற்றொரு தேஹத்தை அடையுமுன் பூதஸூக்ஷ்மங்களால் கட்டியணைக்கப்பட்டு ஜீவன் இங்குமங்கும் அவஶமாகச் செல்லுகிறான். ‘ஸம்பரிஷ்வக்தனாகச் செல்லுகிறான்’ என்று கூறப்பட்டது. ப்ராஜ்ஞனாகிய பரமாத்மா இவன் மனம் முதலிய கரணங்கள் ஒடுங்கி இவனுக்கு ப்ராக்ருத தேஹத்தின் நினைவுமில்லாமல் இருக்கப்போகும் தசையான தூக்கத்தின் ஆரம்பத்திலேயே மாதாபிதாயுவதிகளைப் போலும் அத்யந்த ப்ரியனான ஈச்வரனுக்கு இவனாத்மஸ்வரூபத்தைக் கட்டியணைந்து இவனுக்கு விச்ரமம் செய்வித்து ச்ரமங்களைப் போக்கி இன்பமும் தந்து தூங்கும்வரையில் தன்னுடைய துஷ்டவாஸனைகளெல்லாம் ஒதுக்கி ‘அத்ர பிதா(அ)பிதா பவதி மாதா(அ)மாதா லோகா அலோகா தேவா அதேவா வேதா அவேதா:, தீர்ணோ ஹி ததா ஸர்வாந் சோகாந் ஹ்ருதயஸ்ய பவதி’ என்று ச்ருதிகள் காட்டும் முறையில் சுத்தன்போல வைத்திருக்கிறான். ஆசையுடன் தன்னை இவன் அணையும் ரஸத்தை இவனிடமிருந்து ஈச்வரன் ப்ரதீக்ஷித்துக்கொண்டேயிருந்தும் இவனை ஈச்வரன் வலுவில் ஸம்பரிஷ்வங்கம் செய்து ஸுகப்படுத்திக்கொண்டிருக்கையிலும் இவன் அவனை அணையாமல் பூதஸூக்ஷ்மங்களையே அணைந்துகொண்டு செல்லுகிறானே என்று ஸூத்ரகாரர் தன்னுடைய சோகத்தை வ்யஞ்ஜநம் செய்கிறார். ப்ராஜ்ஞபரிஷ்வங்கம் இவனுக்கு ப்ராப்தமாயும் ஸுலபமாயுமிருக்க இவன் அதையுமிழந்து விரோதியையுமணைந்து செல்லுகிறானே என்று கருணையால் சோகம். இந்த ரஸத்தை இத்திருவாய்மொழியிலேயே ‘எல்லையில்நலம் புல்கு’ என்று அபரிச்சின்ன ஆநந்தமயப்ரஹ்மத்தைப் பரிஷ்வங்கம் செய்து ப்ரக்ருதி பரிஷ்வங்கத்தை விடு’ என்று உபதேசிப்பதால் ரஸமாக வ்யஞ்ஜநம் செய்கிறார். நாமரூபங்களின் பரிஷ்வங்கத்தால் விளையும் ஸம்ஸாரத்துன்பத்தைப் போக்குவதற்கு எல்லையிலந்நலத்தைப் பரிஷ்வங்கம் செய்வதே உபாயம். இந்த பரிஷ்வங்கம் அந்த பரிஷ்வங்கத்தால்தான் நீங்கும். அதனால்தான் நாமரூபபரிஷ்வங்கத்திலிருந்து விமோசநம் கிடைக்கும். மோக்ஷம்வரையில் நாமரூபபரிஷ்வங்கத்தால்தான் ஜீவனுக்கு தனக்கு வெளிப்பட்ட பொருள்களின் ஜ்ஞாநமுண்டாகும். தூக்கத்தில் நாமரூபபரிஷ்வங்கம் நீங்கி ப்ரஹ்மபரிஷ்வங்கம் பெறுகிறான்’ என்று ஈக்ஷத்யதிகரணபாஷ்யம். ஐந்து அக்நிகளில் ஐந்து ஆஹுதிகள் செய்து ஐந்தாம் அக்நியாகிய (யோஷித்) ஸ்த்ரீயினிடம் புமானுடைய ரேதஸ் ஆஹுதி செய்யப்பட்டு கர்பாதாநம் கிடைத்து சரீரம் வளரவேணும். இந்த அக்நிகளில் ஹோமம் செய்வது இவனறியாமலேயே நடக்கின்றது. முதல் ஆஹுதியை ‘தேவா:’ என்று சொல்லப்படும் இந்த்ரியங்கள் செய்து தேவசரீரமென்னும் ஸோமராஜ உடல் ஸ்வர்க்கபோகத்திற்காக ஸித்திப்பதாகச் சொல்லி இருப்பதில் இவனுக்கு இவன் இந்த்ரியங்களை வசமில்லாமல் இவ்வன அவசனாக நினைவற்றிருக்கையில் தேவதேவனான பரமாத்மாவே அந்த ஆஹுதியைக் கருணையினாலும் ப்ரேமையினாலும் செய்விக்கிறார். அவன்தானே தந்தையும் தாயும். ஸ்வர்க்க ப்ராபகமான புண்யம் க்ஷீணமாகையில் அந்ததேஹத்தை அவரே பர்ஜந்யனெனும் அக்நியில் ஹோமம் செய்வித்து அந்நமாகிறது. இந்த ஹோமங்கள்

பிதா புத்ரேஷ்டி செய்வதுபோல நிருபாதிக பிதாவான ஈச்வரன செய்விக்கிறுன் என்பது ச்ருதி காட்டும் ரஸம். பூதஸூக்ஷ்மங்களை 'ஸ்ரூஹ ஜுஹுதி' என்று ஜலத்தைக் குறிக்கக்கூடிய ச்ரத்தாப்பத்தத்தால் பெயரிட்டு ச்ருதி வர்ணித்ததிலும் ப்ரஜோத்பாதநத்தில் பித்ராதிகளைப்போல ஈச்வரனுக்கு இவ்விஷயத்தில் அதிக ச்ரத்தையுள்ளதையும் ஸூசிக்கும். ஸ்வர்க்கத்தை அநுபவிக்கச்செய்த கர்மம் ஸ்வர்காநுபவத்தால் அடியோடு தீர்ந்து போவதில்லை. இன்னும் ஏராளமாக பாக்கி இருந்துகொண்டிருக்கிறது. அதனுல் திரும்பவும் சரீரத்திற்கு ஆரம்பம் செய்யப்படுகிறது. என்று இங்கே இரண்டாமதிகரணத்தில் காட்டப்படுகிறது. கர்மத்தில் சேஷமிருந்தால் ஸம்ஸாரமே பெருகும். மோக்ஷம் என்னும் விடுதலை கிடைக்கமாட்டாதென்கிற இரண்டாமதிகரண விஷயத்தை 'முற்றவும்'—நிச்சேஷமாய், மிச்சமில்லாமல், 'விடுமின்' என்று ஸூசிக்கிறுர். அக்நிசேஷம், ருணசேஷம் போன்றது கர்மசேஷம். ஸ்வர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டு மறுபடியும் 5-ம் ஆஹுதிக்குப் பிறகு கர்ப்பப்ரவேசம் கிடைத்து ஈச்வரக்லுப்தமான மானிட தேஹத்துடன் வெளியேவரு முன். இவனுக்கு ஆகாசம், வாயு, தூமம், அப்ரம், மேகம் இவற்றோடு க்ரமேண ஈச்வரனுல் ஓட்டுவிக்கப்பட்டு மேகம் வர்ஷிக்கையில் தான்யப்பயிரில் சேர்ந்து தான்யத்தோடு ஒட்டி அங்கமாகி ரேதஸ்ஸிக்கான புருஷனுடைய குக்ஷியில் சேர்ந்து ரேதஸ்ஸோடு கலந்து, பிறகு கர்ப்பயோகம் கிடைக்கும் என்கிற அநேக அவஸ்தைகளைக்காட்டியுளது. அங்கெல்லாம் ஆகாசம், வாயு, மேகம், முதலியதோடு ஸம்யோகங்கள் அதிஸ்வல்பகாலந்தான் என்பதை 5-வது அதிகரணம் காட்டிற்று. யாகாதிகள் செய்து புண்யம் ஸம்பாதித்தவருக்குத்தான் தூமாதி மார்க்கத்தால் ஸ்வர்க்கம் சென்று திரும்பவும் மநுஷ்ய ஶரீரம் கிடைப்பதற்கு ஸம்பவமுண்டு. அப்படி புண்யம் செய்யாமல் பாபகர்மிகளாயிருப்பவருக்கு இந்த கதியில்லை. அவர்களுக்கு தேஹம் வருவதற்கு பஞ்சமாஹுதியின் அபேக்ஷையில்லை. அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் முதலிய மசகாதி ஜந்மங்களும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியது. மானிடதேஹங்களே மின்னலைப்போல் நிலையற்றது. தடித்தைப்போல் சஞ்சலமென்பர். மசகாதி ஶரீரங்கள் சிலமுஹூர்த்தங்களே நிற்கக்கூடியவை. 'உயிர்' என்னும் ஜீவன் 'மன்னும் ஆக்கைகள் மின்னில் நிலையில' என்று இங்கே பாடுவதில் இந்த ஸகலவிதமான ஶரீரப்ராப்திகளையும் குறிப்பதில் திருவுள்ளம். 3-ம் அதிகரணத்தில் காட்டப்பட்டதையும் ஆழ்வார் இதனுல் ஸூசிக்கிறுர். மானிடதேஹம் கிடைப்பதற்கு எத்தனையோ கஷ்டங்களும் ஆபத்துக்களுமிருந்தும் இவனறியாமலேயே ஈச்வரன் ஒருவனே துணையாக தந்தையைப்போல் அச்ஞ்யாஹுதிக்கள் செய்வித்துச்சொண்டு கூடவே தொடர்ந்து பித்ருரேதஸ்ஸிலும் தானுமிவனேடு கூட ஒட்டிக்கொண்டு கர்பத்தில் புகுந்து அங்கே கூடவஸித்து இவன் சரீரத்தை வளர்த்து அதற்குள்ளே இவன் ஹ்ருதயகுஹையில் தானும் ப்ரவிஷ்டனுய் பிறகு வெளிவந்து இவனேடு நித்யஸகாவாய் அங்கே வஸிக்கிறுன் என்னும் ஈச்வரனுடைய எல்லையற்ற வாத்ஸல்யத்தையும், அவனன்னியில் இவனுடைய சரீரப்ராப்தி தாரணபோஷணுதிகள் ஈஷத்தேனும் நடக்கமுடியாதென்றும், 'பற்றிலனீசனும் முற்றவும் நின்றனன்' என்று இங்கு மேலே 5-ம் பாட்டில் பாடுகிறபடி அவன் இவனைத் தன் வீடு சேர்ப்பதிலேயே ஸங்கமுடையவராய் ஓயாது ப்ரயத்நம் செய்துகொண்டிருப்பதையும் இந்த பாதம் ஸூசநம் செய்கிறது. கோரமான ஸம்ஸாரத்தில் வைராக்யத்தையும், அதிலிருந்து விடுதலைபெற ஸர்வேச்வரன் ஸஜ்ஜமாய்க் காத்துக்கொண்டிருப்பதால் அவனுக்குள் அடைக்கலம் புகுந்து அவனுக்குள்ளேயே வஸிக்கவேணுமென்பதை இங்கே தெளிவிக்கிறுர்.

இரண்டாம் பாட்டு

மின்னின்நிலையில மன்னுயிராக்கைகள்
என்னுமிடத்திறை உன்னுமினீரே
(திருவாய்மொழி- 1-2-2)

இரண்டாம் பாதத்தில் முதல் 4 அதிகரணங்களில் ஸ்வப்ந, ஸுஷுப்தி, மூர்ச்சாரூபமான இவனுடைய அவஸ்தைகளை விசாரித்து அவற்

திலுள்ள தோஷங்களையும், அவ்வவஸ்தைகளிலும் பரமாத்மாதீநமாகவே இவனுடைய ஸ்வப்நபோகங்கள், தூக்கம் விழிப்பு மூர்ச்சை நீங்குதல முதலியன நடக்கின்றதால் அவனுடைய உபகாரங்களையும் மிகுந்த ஸ்நேஹத்தையும் விளக்குகிறார். ‘மின்’ என்பது மின்னலையும், மின்னுளியான ஸ்வப்நங்களையும் குறிக்கும். முதலதிகரணமான ஸ்வப்நாதிகரணத்தை ‘மின்’ என்பதால் ஸூசிக்குமழகு ரஸிக்கத்தக்கது. ஜாக்ரதவஸ்தையும் ஸ்வப்நம்போல் அஸ்திரமும், சஞ்சலமும் அஸாரமும் வெறும் மினுமினுப்புமாகுமென்பதையும் ஸூசிக்கிறார். ஸ்வப்நத்தில் பகவானால் இவனுடைய அல்பகர்மங்களை யநுஸரித்து இவன் போகத்திற்காக தாத்காலிகமாக ஸ்ருஷ்டிக்கப்படும் போக்யங்களை யநுபவிக்க இவனுக்குத் தாத்காலிகமாக கண் காது முதலியதுகளோடு அளிக்கப்படும் ஸ்வாப்ந சரீரங்களைக்கொண்டு தேஹத்திற்கு வெளியே கொண்டுபோகப்பட்டு அங்கங்கே க்ஷணிகமான போகங்களை யநுபவிக்கிறானென்று ஸ்வப்நவிஷயத்தில் ‘பஹிஷ்குலாய’ ச்ருதி கூறியதை யநுஸரித்து ஸித்தாந்தத்தில் கூறப்படுவதைப்போல ‘மின்’ என்னும் ஸ்வப்நங்களிலும் ஸ்வல்பக்ஷணவர்த்தியான சரீரங்கள் ஜீவனால் மன்னப்படுவதையும் ஸூசிக்கிறார். ‘மன்னுயிர்’ என்பதற்கு தேஹத்தைப்போல் அஸ்திரமில்லாமல் தேஹங்கள் மாறிமாறியும் ஸ்திரமாயுள்ள ஜீவன் என்றும், உயிரென்னும் ஜீவனால் நுழையப்படுமென்றும் பொருளுரைக்கப்பட்டது. முன்பாசுரத்தில் கீதாசரமச்லோகம் ஸூசிக்கப்படுகிறதுபோல் இங்கு ‘தேஹீ நித்யமவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத’ என்கிற கீதோபதேச ஆரம்பச்லோகத்தை ஸூசிக்கிறார். உயிர் தேஹத்தை மன்னி அதன் ஸம்பந்தத்தால்தான் இவனுக்கு ஜ்ஞாநத்திற்கு ஸங்கோசம் வருகிறதென்றும், அதனால்தான் ஸம்ஸாரமும், அதன் துக்கங்களும் வருகின்றனவென்றும் முதல் ஸ்வப்நாதிகரணத்தில் ‘ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹ ஹி’ என்கிற ஸூத்ரப் பொருளையும் ஸூசித்து ஆக்கைகளை மன்னி ஸங்கடப்படுவதை இங்கே பாடுகிறார். ப்ரபோதசந்த்ரோதயம், ஸங்கல்பஸூர்யோதயம் முதலிய அத்யாத்ம நாடகங்களில் தேஹம் போக்ய விஷயங்கள் முதலியவற்றின் உண்மையான இருப்பை விசாரம் சிறிது செய்தாலுமுடனே அவற்றின் ஹேயத்வமும், ஆத்மஸ்வரூபவிரோதித்வமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல த்ருஷ்டமாகுமென்பது காட்டப்பட்டது. இவ்வஸ்து விசாரம் செய்வது நீங்களே செய்தால் போதும். இதற்கு ஒரு ப்ரமாணாபேக்ஷையுமில்லை. ஸதாசார்யோபதேசமும் வேண்டாவென்ற ரஸத்தை ‘நீரே’ என்பதால் விளக்குகிறாரென்பதை ஈடு காட்டிற்று. முன்பாசுரத்தில் ‘வீடு’ என்னும் பதம்போல இங்கே ‘இறை’ என்பதற்கு க்ஷணப்பொழுது என்றும், ஸ்வாமியான ஈச்வரனென்றும் இரண்டு பொருளும் கொள்ளலாம். 101-தேவவருஷம் இந்த்ரனைப்போல ப்ரஹ்மசர்யமிருந்து குருபதேசம் பெறவேண்டியதில்லை. இந்த ஸம்ஸார தோஷங்கள்நன்கு விளங்குவதற்கு ஒரு க்ஷணம் நீங்களாராய்ந்தால் போதுமென்கிறார். தேஹமும் ஜீவனுக்கு வாஸபுரமாகும். வாஸுதேவன் இவனுக்கு வாஸபுரமே. ப்ரஹ்மபுரமென்று தேஹத்தை வர்ணித்த தஹரவாக்யமே ‘ஏதத் ஸத்யம் ப்ரஹ்மபுரம்’ என்று ப்ரஹ்மத்தையே புரமென்றும் கூறிற்று. அந்த புரம்தான் இவன் வஸிக்கவேண்டிய புரமென்றும், அப்புரமே இவனுக்கு ஸத்யமென்றும், இந்த சரீரம் இவனுக்குப் படைவீடானதால் இதை இவனுக்கு ‘வீடு’ என்று சொல்வதும் உண்மையாகாதென்றும் அந்த ச்ருதி ‘ஏதத் ஸத்யம் புரம்’ என்பதால் விளக்கிற்று. இந்த நிலையற்ற ஆக்கைகளும் சாச்வத இன்பமான ப்ரஹ்மமும் இரண்டுமிவனுக்குப் பற்றக்கூடிய சரணமென்னும் வீடாக இருக்கையில் அவனை சரணமாக (வீடாக) ப்பற்றுமல் நிலையற்ற ஆக்கைகளையே சரணமாகப் பற்றுகிறானே என்ற சோகத்தைத் தெளிவிக்கிறார். இந்த புரத்தையும் பாருங்கோள்; அந்த புரத்தையும் பாருங்கோள். இது எத்தனை துக்கமயமோ அது அத்தனை இன்பமயம். இது எத்தனை அஸ்திரமோ, அது முழுவதும் ஸ்திரம். உயிரான ஜீவனுக்கு ஏற்ற உயிரான புரம்; அசேதநப் புரமல்ல. ‘சேதநாநாம் சேதநனே’ புரமாகுகிறான். ‘நித்யாநாம் நித்யனே’ புரமாகிறான்.

என்கிற ரஸங்களைக் காட்டுகிறார். இரண்டாமதிகரணத்தில் ப்ராஜ்ஞனென்னும் பரமாத்மாவென்னும் வாஸஸ்தானத்திலேயே கேவல ஜீவஸ்வரூபம் ஸுஷுப்திகாலத்தில் வஸிக்கிறது. ஈச்வரனே இவனுக்குப் பர்யங்கமாக நித்ராகாலத்தில் இருந்து இவனுக்கு ச்ரமங்களைப் பரிஹரிக்கிறான் என்று ஸூத்ரகாரர் விளக்குவதையும் அவர் நெஞ்சிலுள்ள ச்ருதிகளையுமிதனால் ஸூசிக்கிறார். வாதிகேஸரி ஸ்வாமியின் பன்னீராயிரத்தில் 'இறை உன்னுமின்னீரே' என்பதற்கு 'நீங்களே ஸ்வாமியை மநநம் பண்ணுங்கோள்' என்று பொருள் உரைக்கப்பட்டது. பரமாத்மா தவிர மற்ற எல்லாவற்றிலும் விரக்தனாய் பரமாத்மாவினிடம் ரக்தனாய் இருக்கவேண்டுமென்று இரண்டையும் சேர்த்து இப்பாதத்தில் கூறுவது போல இத்திருவாய்மொழியில் எல்லாப்பாசுரங்களிலும் இறையினிடம் ஏகாக்ரமாய் லயித்து ரமிப்பதையும் பாடி வருகிறார். 'ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மானம் பச்யேத்' என்று ப்ருஹதாரண்யகத்தின் முடிவில் கூறப்பட்ட பகவதுபாஸந விதிக்கு இது ஏற்கும் அங்கமும் அங்கியும் சேர்த்து விதிப்பது. 'ஸாத்விகாஸ: ஸுஹ்ருதாஸ:' என்று முதலிரண்டு பாசுரங்களை ரத்னாவளி ஸங்க்ரஹத்தில் 'ஸுஹ்ருதாஸ:' என்று அநந்தமும் ஸ்திரமுமான சேஷியின் மநந த்யாநாதிகளை விதிப்பதாகவும் கருத்தைக் காட்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸுமுகன்

ஒவ்வொரு விஷ்ணுகோவிலின் மதிற்சுவர்களிலும் கருடன் வைத்திருக்கிறார்கள். அவைகளிலும் கருடவாஹநத்தின் கழுத்திலும் ஒரு ஸர்ப்பம் போட்டிருக்கக் காண்கிறோம். ஸ்ரீதேசிகன் 'வாமே தேவக்ஷணஸ்யா ஹஸ்தே வாஸுகி:' (க-ப-36) என்கிற ச்லோகத்தில் 'வலதுகையில் குளிகையென்னும் ஸர்பத்தையும் இடதுகையில் திருவனந்தாழ்வானையும் வளையாக உடையவனும், வாஸுகியை யஜ்ஞோபவீதமாகவும், தக்ஷகனை கடிஸூத்ரமாகவும், கார்கோடகனை ஹாரமாகவும், பத்மன், மஹாபத்மன் என்பவர்களை குண்டலங்களாகவும், திருமுடியில் குளிகனை ஆபரணமாகவும் உடைய பக்ஷிராஜன் என்னை ரக்ஷிக்கட்டும்' என்று ஸ்தோத்ரம் செய்தபடி அனேக ஸர்ப்பங்களையல்லவோ கருடன் திருமேனியில் போட்டிருக்கவேண்டும் அப்படி இல்லாமல் ஒரு ஸர்பத்தைமாத்ரம் போட்டிருக்கக் காரணமென்ன? ஒரு கோவிலில் செய்ததைப் பார்த்து மற்றொரு கோயிலில் செய்துவிட்டார்கள் என்று சொல்வது ஸரியல்ல. நம் முன்னோர்கள் அப்படிச் செய்யவுமில்லை. மஹாபாரதத்திலுள்ள ஒரு கதையைக்கொண்டே அது நடந்திருக்கிறது. அக்கதை வருமாறு:—

இந்த்ரனின் ஸாரதியான மாதலிக்கு குணகேசி என்று ஒரு பெண்ணிருந்தாள்; அவள் மிகவும் அழகுடையவள். அவள் யௌவநத்தை அடைந்ததும் அவளுடைய தாயும், தமப்பனும், தம் செல்வப்பெண்ணுக்கு விவாஹம் செய்துவைக்க எண்ணினார்கள். தகுந்தவரன் தேவலோகத்திலோ மனுஷ்ய லோகத்திலோ இல்லாமையை யுணர்ந்து அவர்கள் மனம் கலங்கினார்கள். பிறகு நாகலோகத்திலாவது ஒருவன் தகுந்தவனாக இருக்கிறானா பார்ப்போம் என்று எண்ணி மாதலி மனைவியிடமும் பெண்ணினிடமும் வரன்தேட போய்வருவதாகச்சொல்லி வீட்டைவிட்டுப் புறப்பட்டுச்சென்றான். போகும் வழியில் நாரதமஹர்ஷியைக்கண்டான். அவர் 'மாதலே! எங்குச்செல்கிறாய் இந்த்ரனின் சார்யார்த்தமா? உன்னுடைய கார்யத்தைக்கருதியா?' என்று கேட்டார். அதற்கு மாதலி 'மஹர்ஷே! என்னுடைய பெண் குணகேசிக்கு ஸத்ருசமான மணாளன் எவ்விடத்திலா

வது இருக்கிறுனு என்று பார்த்துவருவதற்காகச் செல்கிறேன். அப்படி ஒருவன் கிடைத்தால் என் பெண்ணை அவனுக்குக் கொடுத்து விவாஹம் செய்துவைக்கலாம் என்கிற அபிஸந்தியுடன் புறப்பட்டேன்' என்று கூறி தன்னுடைய எல்லா அபிப்ராயத்தையும் சொன்னுன்.

இதைக்கேட்ட நாரதர் 'மாதலே! கவலைப்படாதே குணகேசிக்கு அநுரூபமான வரனை நான் பார்த்துத்தருகிறேன்' என்று சொல்லி அவனுடன் புறப்பட்டு வருணலோகம் முதலிய லோகங்களுக்குச் சென்று, கடைசியில் ரஸாதலத்திலுள்ள போகவதீ என்கிற பட்டணத்தையடைந்தார். அங்கரை நாரதமஹர்ஷி மாதலிக்குக்காட்டி மாதலே! இந்த போகவதியைப்பார். இது அமராவதிக்குத் துல்ய மானது. இதை வாஸுகி என்பவன் ஆண்டுவருகிறுன் என்றெல்லாம் சொல்லி அங்குள்ள முக்யமானவர்களையும் காண்பித்து வந்தார். அவர்களைப் பார்த்துக்கொண்டுவந்த மாதலியானவன் முடிவில் ஒரு இளைஞனைப்பார்த்துவிட்டு நாரதரைநோக்கி ஸ்வாமிந்! இவன் யார்? இவனுக்குப் பிதா யார்? தாயார் யார்? இவனுடைய தைர்யத்தையும், ரூபத்தையும், வயஸையும் பார்த்த என்னுடைய மநஸ்ஸு இவனிடத்தில் செல்லுகிறது. இவனை குணகேசிக்குப் பதியாக வரிக்கின்றேன் என்றுரைக்க நாரதரும் ஸுமுகனுடைய ஜன்மவ்ருத்தாந்தங்களைச் சொல்லலானுர்.

'ஸாரதே! இவன் ஆர்யகன் என்பவனுடைய பௌத்ரன்; மௌநகர் என்பவருடைய தௌஹித்ரன்; சிகுரன் என்பவனின் புத்ரன்; ஸுமுகன் என்று இவனுக்குப் பெயர். சிகுரன் ஸமீபத்தில்தான் கருத்மானுல் கொன்று தின்னப்பட்டான்'.

'மஹர்ஷே மிகவும் ஸந்தோஷம்! இவனுக்கு குணகேசியைக்கொடுக்க ஆசைப்படுகிறேன். அதற்கு வேண்டிய ப்ரயத்நம் செய்ய ப்ரார்த்திக்கிறேன்' என்று மாதலி சொன்னுன்.

பிறகு நாரதர் ஆர்யகனிடம் சென்று 'ஆர்யக! இந்த்ரனின் ஸாரதியான மாதலிக்கு குணகேசி என்று ஒரு பெண்ணிருக்கிறுள்; அவள் ரூபத்தில் இந்த்ராணிக்குச் சமமானவள்; அவளை உன்னுடைய பேரன் ஸுமுகனுக்குக் கொடுக்க மாதலி ஆசைப்படுகிறுன். அவனுடைய ஸாமர்த்யத்தாலேயே இந்த்ரன் தேவாஸுரயுத்தத்தில் ஜயித்தான். ஆகையால் அவனுடைய ஸம்பந்தம் உனக்கு ஸத்ருசமானதே. தகப்பன் இல்லாதவனுகிலும் ஸுமுகனுடைய அழகையும், அறிவையும், ஆசாரத்தையும், குணத்தையும், ஒழுக்கத்தையும் கண்டறிந்த நாங்கள் குணகேசியை அவனுக்குக் கொடுக்க முன்வந்துள்ளோம். ஆகையால் நீ அதற்கு ஸம்மதிக்கவேணும்' என்றுர்.

இதைக்கேட்ட ஆர்யகன் ஸந்தோஷத்தையும், கஷ்டத்தையும் அடைந்தவராய்க் கொண்டு நாரதமஹர்ஷியைப்பார்த்து, 'தேவர்ஷே! இந்த்ரனின் ஸாரதியான மாதலியின் ஸம்பந்தத்தை யார் விரும்பமாட்டார்கள். ஆயினும், தேவரீர் சொல்லியபடி குணகேசியை என்னுடைய நாட்டுப்பெண்ணுக வரிக்க நான் ஆசைப்படவில்லை. ஏனென்றுல்:—என்னுடைய பிள்ளை சிகுரனை ஸமீபகாலத்தில் பக்ஷிராஜன் பக்ஷித்துவிட்டான். அத்துடனில்லாமல், அடுத்தமாதம் ஸுமுகனையும் சாப்பிட்டுவிடுகிறேன் என்று போகும்போது சொல்லிச் சென்றுன். கருடன் சொல்லியதை நிச்சயம் செய்துமுடிப்பான் என்பதில் எனக்கு ஸந்தேஹமில்லை. ஆகையால் நான் கல்யாணத்தையும் விரும்பவில்லை என்றுன்.

ஸமீபத்திலிருந்து இவைகளைக் கேட்டுநின்ற மாதலி 'பந்நகோத்தமா! நீர் சொன்னவைகளை நான் நன்கு ஆராய்ந்தேன். உம்முடைய பேரனை என்னுடன் தேவலோகத்திற்கு அனுப்பினுல், நாரதரும் நானும் அவனை தேவேந்த்ரன் ஸமீபத்திற்கு அழைத்துச் சென்று அவரால் இவனை தீர்க்காயுஷ்மானுக இருக்க ஆசீர்வதிக்கச்செய்கிறேும்' என்றுன். ஆர்யகனும் ஸுமுகன் தேவலோகத்திற்குச் செல்ல இசைந்தான். பிறகு மூவரும் தேவலோகத்திற்குச் சென்றுர்கள். தேவேந்த்ரனை அங்கு பார்த்தார்கள். அப்பொழுது உபேந்த்ராவதாரனுன பகவான் அவ்விடத்தில் தேவேந்த்ரன் ஸமீபத்தில் வீற்றிருந்தார்.

அவர்களிடத்தில தாங்கள் வந்த காரணத்தைச் சொல்ல, பகவான், 'வாஸவா! ஸுமுகனுக்கு அம்ருதத்தைக்கொடு. அவன் நல்ல ஸௌக்யத்தையடையட்டும்' என்றார். சதமகனும் வைனதேயனுடைய பலபராக்ரமத்தைப்பற்றி சற்று யோசித்து 'நீயே அம்ருதத்தைக்கொடு' என்றான். அதற்கு பகவான் நீ தேவதைகளுக்செல்லாம் ஈச்வரனாக இருக்கிறாய் உம்மால் கொடுக்கப்பட்டால் யார் என்ன செய்துவிடமுடியும்? என்று சொன்னதும், இந்த்ரன் ஸுமுகனுக்கு தீர்க்காயுளை கொடுத்தான். இவ்வரத்தைப் பெற்றுக்கொண்ட ஸுமுகனும் ஸுமுகனானன். பிறகு கல்யாணம் விமர்சையாக நடந்ததும் நாரதமஹர்ஷியும், ஆர்யகனும் வதூவரர்களை ஆசீர்வதித்து விட்டுச்சென்றார்கள்.

ஸுமுகனுக்கு இந்த்ரன் ஆயு:ப்ரதானம் செய்ததையும் ஸுமுகன் தேவலோகத்தில் இருக்கிறான் என்பதையும் கேட்டறிந்த ஸுபர்ணன் மிகவும் கோபத்தையடைந்தார். அந்த கோபத்தால் மூவுலகும் நடுங்கும்படி இரண்டு இறகுகளையும் அடித்துக்கொண்டு தேவலோகத்திற்கு வந்தார். அங்கு இந்த்ரனைக்கண்டு 'ஹே பகவந்! என்னுடைய பசியை நீ அறியவில்லையா? என்னிஷ்டம்போல் நடக்கும்படி முன்பு சொல்லி இப்பொழுது மாற்றிவிட்டாய். நான் முன்பே இவனை ஆஹாரார்த்தம் வரித்திருக்கிறேன். ஆசையால் இவனை விட்டு மற்றொருவனை நான் ஹிம்ஸிக்க விரும்பவில்லை. வாஸவ! உன்னிஷ்டப்படி நீ விளையாடுகிறாய்' என்று பலவாறாகக் கோபத்துடன் பேசிய கருடனுடைய வார்த்தையைக்கேட்ட ஸுமுகன் துர்முகனாய் ஸர்ப்பரூபமெடுத்து [ரக்ஷ மாம் விஷ்ணோ [illegible]] பகவானுடைய திருவடியைப் பிடித்துக்கொண்டான். பிறகு இந்த்ரன் 'ஸுபர்ணோத்தம! 'உன்னை வணங்குகின்றேன். என்னிடத்தில் உனக்குக்கோபம் வேண்டாம். நான் ஸுமுகனுக்கு ஆயு:ப்ரதானம் பண்ணவில்லை. விஷ்ணுதான் அந்தப்படி செய்தது' என்று சொன்னதும் வைனதேயன் 'தேவேச! மூன்று லோகங்களும் உன்னுடைய ஆளுகையிலிருக்கும்போது பிறர்பேரில் ஏன் பழி சுமத்துகிறாய். இந்த லோகங்களை ஆளுவதற்கு எனக்கு சக்தியுண்டு. நான் பலிஷ்டன். என்னை ஜயிக்க ஒருவராலும் முடியாது. நானும் அதிக பலமுள்ள திதிபுத்ரர்களைக் கொன்றிருக்கிறேன்.

யத்து [illegible] யத்நாத் பரிசராம்யஹம்। வஹாமி சைவாநுஜந்தே தேந மாமவமந்யஸே॥ கோऽந்யோ பாரஸஹோ ஹ்யஸ்தி கோऽந்யோऽஸ்தி பலவத்தர:। மயாயோ ஹி விஶிஷ்டோऽஸ்மி வஹாமீமம் ஸபாந்தவம்॥ [illegible] போஜநாதவரோபித:। தேந மே கௌரவம் நஷ்டம் த்வத்தஶ்சாஸ்ய ச வாஸவ। யோऽஹம் பக்ஷைகதேஶேந வஹாமி த்வாம் ஸஹாநுஜம்। விம்ருஶஸ்வ ஶநைஸ்தாத கோ ந்வத்ர பலவாநிதி॥'

[நான் உன்னுடைய தம்பி உபேந்த்ரனின் த்வஜத்தில் நின்றுகொண்டு அவனுக்கு வேண்டியவைகளைச் செய்கிறேன். அவன் எங்கு போகவேண்டுமென்றாலும் அவனைத் தூக்கிச் செல்கிறேன். அவனை மாத்ரமன்று; அவனுடைய பந்துக்களையும் தூக்கிச் செல்கிறேன். அப்படிப்பட்ட என்னை அவமானப்படுத்திவிட்டாய். என்னுடைய கௌரவம் போய்விட்டது. உன்னை என்னுடைய ஒரு இறக்கையால் தூக்குவேன். அப்படியாகில் நீ பலவானா? நான் பலவானா? என்பதை யோசி.] என்று பலவாறாகக் கருடன் கோபித்துக் கொண்டான்.

இவைகளை பக்கத்திலிருந்து கேட்டிருந்த பகவான் வைநதேயனைப்பார்த்துச் சொல்லலானார். 'கருட! துர்பலனான உன்னை பலவானாக என்னுடைய எதிரில் பேசுகிறாய். மூன்று லோகமும் சேர்ந்து தூக்கினாலும் என்னைத் தூக்கமுடியாது. நானே என்னையும் உன்னையும் தரிக்கிறேன்.

'த்ரைலோக்யமபி மே க்ருத்ஸ்நமஶக்தம் தேஹதாரணே। ஸ்வயமேவாத்மநாத்மாநம் வஹாமி த்வாஞ்ச தாரயே। ந த்வம் வஹஸி [illegible] மோகமேவ விகத்தநம்। ஜகோ-

வநூரெகூகூவம் வாஹா ஸவெ்ருதாவம் வஹ ||' என்னை நீ தூக்கிச் செல்வதாக உளறுகிறாய். சக்தியுள்ளவனாகில் என்னுடைய இடது கையைத் தூக்கு பார்ப்போம், என்று சொல்லி அவன் தோளில் இடது கையை வைத்தார். பக்ஷிராஜன் அந்த பாரத்தைத் தாங்கமுடியாமல் நடுநடுங்கி கீழே மூர்ச்சித்து விழுந்தார். [ஐத்ருக்ஷா ஹஶவாம்ஷூத்ர ஸுக்ஷெய வாஹா வோஸ்ருஜக | க்ஷூபொாவீதம் ஸஊெசாஜம் ஹாஶஷஜெஷாஶசஊவாக | நிவவாத ஸஹா-ஶாதெஊா விஹ்வெ நஷூவெதந:] சைலவநாதிகளுள்பட இந்த ப்ரிதிவீயானது எவ்வளவு பாரத்தை உடையதாகுமோ அவ்வளவு பாரத்தால் பகவான் கருடனைப் பிடித்தார். கருடன் அந்த பாரத்தைத் தாங்க முடியாமல் மூர்ச்சித்தார். பிறகு வைநதேயன் மிகவும் ச்ரமப்பட்டு எழுந்து பகவானை தலையால் வணங்கி 'ஸ்வாமிந்! பலக்கொழுப்பால் உம்முடைய பலமறியாமல் சில வார்த்தைகள் சொல்லிவிட்டேன். அவைகளைப் பொறுத்தருளவேணும்' என்று ப்ரார்த்தித்தார். பிறகு பகவான் அவனிடத்தில் ப்ரஸந்நனாய் 'இப்படி மறுபடியும் எண்ணப்போகிறாய்' என்று சொல்லி 'வாமாஜூஷ்டெந வி க்ஷேவ ஸஊவம் ஶாவொவஷி | ததஃ ப்ரஹ்ருதி...... ஸஹ ஸவெடிண வதடிெத' கால் கட்டைவிரலால் ஸுமுகனை கருடன் கழுத்தில் தூக்கி எறிந்தார். அது முதல் கருடன் ஸுமுகனுடனிருக்கிறான். இந்த சரிதத்தைக்கொண்டே நம் பெரியோர்கள் அம்மாதிரி செய்திருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது.

ஸ்ரீ:

ஸதுபதேசம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

"மோக்ஷோபாயம்"

சிஷ்யன்— ஸ்வாமிந்! ஸந்துஷ்டனாகிவிட்டேன். வைகுண்ட லோகத்தைப் பற்றி இன்னும் எவ்வளவு சொல்லவேண்டியிருக்கிறது?

ஆசார்யன்—இப்பொழுது உனக்கு நான் சொல்லியிருப்பதைப்போல் இன்னும் அநேகம் மடங்கு சொல்லவேண்டியதாக இருக்கிறது.

சிஷ்— ஸ்வாமிந்! இப்பொழுதே அந்த வைகுண்டத்தைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று ஆவலாக இருக்கிறது. என்ன செய்தால் அந்த வைகுண்டத்தை அடையமுடியும்?

ஆசா— ஒரு விஷயம் சொல்லுகிறேன் கேள். எந்த ஜாதியில் பிறந்தவனாகயிருந்தாலும் யாராக இருந்தாலும் அநேககோடிஜந்மங்களில் செய்த புண்ய பாபங்களில் இதுவரையில் அநுபவித்ததுபோக மிச்சமாக இருக்கிற புண்ய பாபங்களையும் ஒழித்துவிட்டானாகில் உடனே வைகுந்தத்திற்குப்போய் ஆநந்தமடையலாம்.

சிஷ்— மிச்ச பாபபுண்யங்கள் ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு இருக்கும்?

ஆசா— (சிரித்துக்கொண்டு) மிச்ச புண்ய பாபங்களா! சொல்லுகிறேன் கேள். புண்ய பாபங்களைக் கடுகு அளவு சிறியதாக நினைத்துக்கொள்ளு. ஒரு மரக்கால் கடுகில் எவ்வளவு கடுகு என்று கணக்கிட்டு சொல்ல முடியுமா? அந்தமாதிரி எத்தனையோ கோடி பாபபுண்யங்கள் இதுவரைக்கும் ஒழிந்தது போக மிச்சமிருக்கிறதுகள் என்று சொல்லுவார்கள்.

சிஷ்— இதே ஜந்மத்தில் மிச்சபுண்யபாபங்கள் அவ்வளவும் எப்படி ஒழியும் ஸ்வாமிந்? பயமாக இருக்கிறதே.

ஆசா— பண்ணின பாபங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்துவிட்டால் போய்விடுகிறது.

சிஷ்— எத்தனையோ பாபங்களுக்கு எப்படி ப்ராயச்சித்தம் செய்துவிடமுடியும்?

ஆசா— கவலை வேண்டாம். கீதையில்கடைசியில் 'மாமேகம ஶரணம் வ்ரஜ| அ

ஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று ஶரணாகதரக்ஷகனை கண்ணன் சொல்லியிருக்கிறானல்லவா? அவன் வார்த்தையின்படி நாம் பகவானை ஶரணமடைந்துவிட்டால் அந்த பகவான் நம்மை எல்லாபாபங்களிலிருந்தும் விடுவித்து வைகுந்தத்தை அடையச் செய்வான்.

சிஷ்- இந்த ஶரணாகதி கீதையில்மாத்ரம்தான் சொல்லப்பட்டிருக்கிறதோ வேறு எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

ஆசா- உபநிஷத்துகளில் அநேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்ராமாயணத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாகவதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வராஹ புராணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் அருளிச்செய்திருக்கிற ப்ரபந்தங்களில் கணக்கில்லாத அவ்வளவு இடங்களில் இந்த ஶரணாகதியானது அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா ஆசார்யர்களுடைய க்ரந்தங்களிலும் ஶரணாகதியானது விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உனக்குத் தனித்தனியாக இந்த இடங்களைச் சொன்னேன். ஶரணாகதியைப்பற்றிச் சொல்லாத சாஸ்த்ரங்களே கிடையாது. வேதங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், ஸ்ம்ருதிகள் எல்லாம் ஶரணாகதி மாஹாத்ம்யத்தைச்சொல்லியிருக்கிறதுகள்.

சிஷ்- பக்தியோகம் பண்ணினால்தான் மோக்ஷம் வரும் என்று வேதங்களில் சொல்லியிருப்பதாகச் சொல்லுகிறார்களே?

ஆசா- ஆம். பக்தியோகம் செய்தால் எல்லா பாபங்களையும் போக்கி பகவான் முக்தியைக் கொடுப்பான். அந்த பக்தியோகத்தைச் செய்யமுடியாதவர்கள் ஶரணாகதியைச் செய்தால்தான் பகவான் மோக்ஷத்தைக் கொடுப்பான் என்று ஸகல சாஸ்த்ரங்களும் சொல்லுகிறதுகள். ஆகையால் நாம் இந்த கலியுகத்தில் பக்தியோகம் செய்ய சக்தியற்றவர்களாக இருக்கிறபடியால் முக்தி அடைய ஆசையிருந்தால் கட்டாயம் சரணாகதி பண்ணினால்தான் பகவான் மோக்ஷங்கொடுப்பான். ஶாஸ்த்ரத்தின் ஸாரமறியாத யாராவது உன்னை எந்த விதமாக கலைத்தாலும் பாபத்தைப் பண்ணினவன் பகவானை காகாஸுரனைப்போல் ஶரணமடையாவிட்டால் எப்படிக் காப்பாற்றுவான் என்று பதில் கேட்டாயேயானால் வாயை மூடிக்கொண்டு போய்விடுவான். கவலை வேண்டாம்.

சிஷ்- தேவரீர், ஶரணாகதி பண்ணிக்கொள்ளவேண்டும் மோக்ஷமடைவதற்கு என்று சொல்லுகிறது. ஒருவர் நான் மோக்ஷமடைய ந்யாஸம் பண்ணிக்கொண்டேன் என்கிறார். மற்றொருவர் ப்ரபத்தி பண்ணிக்கொண்டேன்; இனிமேல் மோக்ஷத்தைப் பற்றிக் கவலை இல்லை என்கிறார். இப்படியெல்லாம் பலபேர்கள் பல விதமாகச் சொல்லுகிறார்களே. அதனுடைய உண்மை என்ன? என்மனத்தில் படும்படி சொல்லவேண்டும்.

ஆசா- நீ கேட்டதில் மிகவும் ஸந்தோஷம். சொல்லுகிறேன் கவனித்துக்கேள். 'த்வத்பாதமூலம் சரணம் ப்ரத்யே' என்று ஒரு இடத்தில். 'ஶரணம் கத:' என்று ஒரு யிடத்தில். இன்னும் இம்மாதிரி அநேக இடங்களில் ஶரணாகதி என்றும், ப்ரபத்தி யென்றும், பரஸமர்ப்பணம் என்றும், பரந்யாஸ மென்றும், ஆத்மஸமர்ப்பணமென்றும், அத்ருஷ்டமென்றும், ந்யாஸமென்றும், ஆத்மநிக்ஷேபமென்றும், ஆத்மநிவேதநமென்றும், அடைக்கலமென்றும் இப்படியெல்லாம் பலபடியாக ஒவ்வொருகாரணத்தை முன்னிட்டு ஒவ்வொரு பெயர் வைத்திருக்கிறது. ஆகையால் பரந்யாஸம் சரணாகதி ப்ரபத்தி என்று சொன்னால் வெவ்வேறு என்று எண்ணிக்கொள்ளாதே; எல்லாம் ஒன்றுதான். ஆகையால் பகவானைச்ஶரணமடைந்து விட்டாயேயானால் கட்டாயம் பகவான் உனக்கு பாபங்களையெல்லாம் போக்கி வைகுந்தத்தைக் கொடுத்து ஆநந்திக்கச் செய்வார். இந்த விஷயத்தில் கலஹவார்த்தைகளைக் கேட்டு பகவானை ஶரணமடையாமல் போய்விட்டாயேயானால் நீ ஆசைப்பட்டபடி வைகுந்தம் உனக்குக் கிடைக்காது. ஆகையால் பக்தியோகம் பண்ண சக்தி இல்லாதவனாக இருக்கிற நீ பகவானை ஶரணமடை. அந்த ஶரணாகதிதான் முக்திக்கு உபாயம். ஏமாந்துவிடாதே.

சிஷ்- கொஞ்சம் சொன்னால் போதும். ஏமாந்து விடமாட்டேன். ஒரு ஸந்தேஹம். நாம் எத்தனை பாபம் பண்ணி யிருக்கிறோமோ

அத்தனை ஶரணாகதி பண்ணவேண்டுமா? அல்லது ஒருதடவை ஶரணாகதி பண்ணிக்கொண்டால் எல்லா பாபமும் போய்விடுமா? சொல்லவேண்டும்.

ஆசா- ஒரேதடவை ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஶரணமடைந்துவிட்டானேயாகில் அநேககோடி ஜந்மங்களில் செய்ததான மோக்ஷவிரோதியான ஸமஸ்த பாபங்களெல்லாம் சட்டாயம் போய்விடுகிறது. ஸ்ரீராகவனும் 'ஸக்ருதேவப்ரபந்நாய' என்று ஒருதடவை ப்ரபத்திபண்ணினால் போதும் என்று திருவுள்ளம் பற்றியிருக்கிறார். 'உமதடிகளடைகின்றேனென்று ஒருகாலுரைத்தவரை' என்று ஒருதடவை ஶரணாகதி பண்ணினால்போதுமென்றும் சொல்லுகிறார்கள். 'ஶரணம் வ்ரஜ, ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று கீதையில் கண்ணன் சொல்லியிருப்பதாலும் ஒருதடவை ஶரணாகதி பண்ணினமாத்ரத்தாலேயே ஸர்வபாபங்களையும் பகவான் போக்கடித்துவிடுகிறானாகையால் ஒரேதடவை ஶரணாகதிபண்ணவேண்டும்.

சிஷ்-கீதையில் கண்ணன் ஸமஸ்தபாபங்களிலிருந்து விடுவிக்கிறேன் என்று சொல்லியிருப்பதால் அநேககோடிஜன்மங்களில் பண்ணியிருக்கும் பெரியபுண்யங்களில் அநுபவித்ததுபோக மிச்சபுண்யங்கள் அநேகம் இருக்குமாகையால் அந்த புண்யங்களையும் அநுபவித்துத் தீர்த்தால்தானே வைகுந்தம்வரும். பண்ணியிருக்கும் புண்யங்களுக்கும் ப்ராயச்சித்தம்தான் ஶரணாகதி என்று சொல்வது ந்யாயமில்லையே. ப்ராயச்சித்தம் சொல்லுகிற எல்லா ஶாஸ்திரங்களிலும் பாபங்களுக்குத்தானே ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. செய்த புண்யங்களுக்கு ப்ராயச்சித்தம் எந்த ஶாஸ்திரங்களிலும் விதிக்கப்படவில்லையே. ஸ்வாமிந்! இந்த ஸந்தேஹத்தை தீர்க்கவேண்டும்.

ஆசா— நீ மிகவும் ஸாமர்த்யசாலிதான். இந்தமாதிரி கேட்டுவிடு. உன் வாத்தியார் திண்டாடட்டும் என்று உனக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் நீ கேட்டுவிட்டாய். முன்னாடியே இம்மாதிரியான ஸந்தேஹம் வந்து தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது:— மோக்ஷத்துக்காக நாம் பண்ணும் பக்தியோகமோ அல்லது ஶரணாகதியோ ப்ராயச்சித்தங்கள் அல்ல. மோக்ஷத்திற்கு உபாயங்கள். ஸ்ரீமந்நாராயணனுக்கு உள்ள கிருபையை நம்மிடத்தில் வளரும்படி பண்ணக்கூடியதுகள். மோக்ஷம் தரவேண்டும் என்று பக்தியோ அல்லதுஶரணாகதியோ ஸ்ரீமந்நாராயணனிடத்தில் செய்தால் அந்த ஸ்ரீமந்நாராயணன், மோக்ஷமடைவதற்குத் தடங்கலாக இருக்கிற நம்முடைய புண்யபாபங்களை எல்லாவற்றையும் நம்மிடத்திலிருந்து விலக்கி மோக்ஷத்தைத் தருகிறான். ஆகையால் மோக்ஷத்தை உத்தேசித்து பண்ணுகிற பக்தியோ அல்லது ஶரணாகதியோ நாம் பண்ணியிருக்கும் பாபபுண்யங்களுக்கு ப்ராயச்சித்தங்கள் அல்ல. ஸ்ரீமந்நாராயணனுடைய கிருபையை நம்மிடத்திலும் வரும்படி பண்ணி மோக்ஷம் தரும்படிசெய்யக்கூடியதானஶாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பெரியதான புண்யரூபமான உபாயங்கள். ஆகையால்தான் பகவான் 'பக்த்யா பரமயாவாபி ப்ரபத்யா வா மஹாமுநே। ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்ய: மமகைங்கர்யலிப்ஸுபி:' என்று தன்னை அடைந்து கைங்கர்யம் பண்ணவேண்டுமானால் பக்தி அல்லது ப்ரபத்தி செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறான். ஆகையால் மோக்ஷமடைவதற்காகவே பக்தியோ ப்ரபத்தியோ செய்யவேண்டுமேயொழிய பாபபுண்யங்களுக்கு ப்ராயச்சித்தமாக செய்கிறதில்லை. மோக்ஷம் தவிர தனியாக சில பாபங்களுக்கு பக்திப்ரபத்திகள் ப்ராயச்சித்தமாகலாம். அப்பொழுதும் புண்யங்களுக்கும் ப்ராயச்சித்தமாக ஶாஸ்திரங்களில் சொல்லப்படவில்லை. ஆகையால் புண்யங்களுக்கு ஶரணாகதி ப்ராயச்சித்தமாகாதே. மோக்ஷவிரோதிபுண்யங்கள் எப்படி ஒழியும் என்று ஸந்தேஹப்படாதே என்று நியமித்திருக்கிறார்கள் ஸர்வஶாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞர்களான பெரியோர்கள். ஆகையால் நீயும் கவலைப்படாதே. சில பெரியோர்கள் வைகுந்தமடைவதற்கு பாபங்கள் எப்படி விரோதிகளோ அப்படியே புண்யங்களும் விரோதிகளானபடியால் அந்த அதிகாரிக்கு அதாவது— வைகுந்தமடையவிரும்புகிறவனுக்கு புண்ணி

யங்களும் பாபங்களாகவே ஆகிவிடுகிறபடியால் புண்யபாபங்களாகிற ஸர்வபாபத்திற்கும் பக்திப்ரபத்திகள் ப்ராயச்சித்தங்களாகத் தட்டில்லை என்றும் சொல்லுகிறார்கள் தெரிந்து விட்டதா?

சிஷ்- இதில் இப்பொழுது இவ்வளவு போதும்; பிறகு கேட்டுக்கொள்ளுகிறேன். ஶரணாகதி நான் பண்ணிவிட்டால் எனக்கு மோக்ஷம் வருமா? வராதா? நாராயணா என்று சொன்னால் மோக்ஷம்வந்துவிடும் என்று சொல்லுகிறார்களே அஜாமிளனுக்கு மோக்ஷம் வந்து விட்டதாமே.

ஆசா—இதெல்லாம் வீண்கேள்விகள். நம் நிகமாந்தமஹாதேசிகன் தீர்மானமாகச் சொல்லியிருப்பதைக்கேள். தான் அநுஷ்டிக்கவுமாம், தனக்காக ஆசார்யாதிகள் அநுஷ்டிக்கவுமாம் ப்ரபத்திக்கல்லது ஶரண்யன் மோக்ஷம் கொடான் என்று. ஆகையால் பக்தியோகம் செய்ய சக்தியற்றவர்கள் கட்டாயம் ஸ்ரீமந் நாராயணனை ஶரணமடைந்தால்தான் மோக்ஷமடைவார்கள். இவ்விஷயம் கிருதயுகம்முதல் நாளதுவரைக்கும் வந்துகொண்டிருக்கும் ஸதாசார்யர்கள் ஸித்தாந்தம். அநுஷ்டானமும் அப்படித்தான். அவர்கள் கிரந்தங்களிலும் அப்படித்தான்இருக்கிறது. ஏமாந்துவிடாதே; மயங்காதே. மேலெழுந்தவாரியாகத் தான் தோன்றியாகப் புஸ்தகம்பார்த்து அர்த்தங்கள் சொல்லுகிற யாரிடத்திலும் சேராதே. ஸதாசார்யர்களிடத்தில் ஸந்தேஹங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்.

சிஷ்—ஸந்தோஷம்ஶரணமடைந்தால்தான் இஷ்டப்பட்ட பலங்கள் எல்லாம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்களே அப்படிச் ஶரணமடைந்து பலமடைந்தவர்கள் யாராவது உண்டோ சொல்லமுடியுமா?

ஆசா— ஸ்ரீதேசிகனே இவ்விஷயத்திற்கு மனத்தில் படும்படி அழகாகச் சொல்லியிருக்கிறார். ப்ரஹ்லாதன், காகாஸுரன், கஜேந்த்ரன், த்ரௌபதீ, விபீஷணன், நந்தகோகுலவாஸிகள், அம்பரீஷன், பாண்டவர்கள், காளியன், க்ஷத்ரபந்து, ப்ரஹ்மா, ருத்ரன், இந்த்ராதிதேவர்கள் எல்லோரும் உன் திருவடியை அடைந்து நல்ல கதியை அடைந்து இருக்கிறார்கள் என்று. இன்னும் பரதன், ரிஷிகள், ஸுக்ரீவன், த்ரிஜடை, லக்ஷ்மணன், சுநச்சேபன் முதலியவர்கள் ஶரணமடைந்து பலம் பெற்று இருக்கிறார்கள். நிச்சயமாக சொல்லுகிறேன். நம் தேசிகஸம்ப்ரதாயப்படி ஸதாசார்யாநுக்ரஹத்தினால் ஸ்ரீமந் நாராயணனை ஶரணமடைந்து முக்தி அடைந்தவர்கள் எத்தனையோ கோடிபேர்கள் இருக்கிறார்கள். ஆழ்வார் ப்ரபத்தி செய்து முக்தி அடைந்ததை யாரும் இல்லையென்று சொல்ல மாட்டார்கள். ஸ்ரீமந்நாதமுநிகள், ஆளவந்தார், ராமாநுஜன், தேசிகன் இன்னும் இப்பொழுதும் பூமண்டலத்தில் எழுந்தருளியிருக்கிற ஸதாசார்யர்கள் தவிர முந்தி ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கும் சட்டளையில் சரணமடைந்த ஸதாசார்யர்கள் எல்லோரும் வைகுந்தமடைந்திருக்கிறார்கள் என்பதில் எள்ளளவும் ஸந்தேஹமில்லை, அந்தந்த ஸதாசார்ய கடாக்ஷம் பெற்ற ஸச்சிஷ்யர்களுக்கும் மோக்ஷம் கிடைத்திருக்கும் என்பதில் ஸந்தேஹிக்க இடமில்லை, ஆகையால் ஶாஸ்த்ரங்கள் சொன்னபடியும் பெரியோர்களின் அநுஷ்டானப்படியும் நீயும் புண்யபாபங்களாகிற மோக்ஷவிரோதிஸகலபாபங்களும் ஒழிவதற்கு ப்ராயச்சித்தமாகச் சொல்லியிருக்கிற ஐந்து அங்கங்களோடு கூடியதான பரந்யாஸத்தை திவ்யதம்பதிகளிடத்தில் செய்துவிட்டாயேயானால் கட்டாயம் இந்த ஜந்மத்தின் முடிவில் மோக்ஷமடைந்து விடுவாய். மோக்ஷம் என்கிற வைகுந்தத்தை அடைந்து ஸ்ரீமந்நாராயணனை ஆதிசேஷதல்பத்தில் ஸேவித்து நித்ய முக்தர்களோடு சேர்ந்து நித்ய கைங்கர்யங்கள் செய்தும் பரமாநந்தத்தை அடைவாய். ஸந்தேஹமில்லை. கவலை வேண்டாம்.

சிஷ்— பகவானைச் ஶரணமடைய யோக்யதை எவ்வளவு வேண்டும்? க்ருபை பண்ணி சொல்லவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

அறிந்த வானந்தத்தை அன்பர்க்கருளும் ஆலிநாடன்

பகவானுடைய அர்ச்சாவிக்ரஹ திவ்ய திருமேனியை ஸேவிக்கும்போது அத் திருமேனியின் ஸௌந்தர்யம், தேஜஸ் முதலியவைகளுடன், பரமபுருஷனுடைய பரத்வஸௌலப்யாதி கல்யாணகுணங்களையும் த்யானித்துக் கொள்வது பக்தர்களது இயற்கை. அதிலும் ஜ்ஞானம் முதிர்ந்த பக்தசிகாமணிகள், பகவத் கல்யாணகுணங்களுடன், அவனது திருவவதார விசேஷங்களும் அப்போதே நடைபெறுவனபோலவும், தாங்கள் அவைகளைக் கண்ணாரக் கண்டாநந்திப்பதுபோன்றதுமான ஆச்சரியமான உணர்வைப்பெற்று அநுபவிப்பார்கள். ஆனால் அவர்களினும் ஜ்ஞாநங்கனிந்தநலங்கொண்ட பாகவதசிரேஷ்டரான ஆழ்வார்கள், பகவானது திருக்கல்யாணகுணங்களையும் திருவவதாரங்களில் அவன் செய்தருளிய லீலாம்ருதங்களையும், பரமோபகாரங்களையும் அவ்வவதாரங்களில் அவனுடன் கூடவேயிருந்து அநுபவித்தவர்களது அநுபவங்களையும் சேர்த்துத் தாங்கள் செவ்வையாக நிச்சேஷமாக அநுபவித்தும், அதோடுநில்லாமல் அவ்வநுபவங்களைப் பின்புள்ள பாகவதர்களும் அவர்களுடைய ஸம்பந்தம்பெற்றவர்களும் அப்படியேயநுபவிக்கும்படி அத்யாச்சரியமானதும் அத்விதீயமானதுமானமுறையில் பாடல்களாக இசையுடன் இயைத்து அநுபவிக்கும்படி, இயற்றியருளுகிறார்கள். அப்படிப்பட்டவோர் பாகவதோத்தமரது அநுபவத்தையும் பரமோபகாரத்தையும் நோக்குவோம் வாரீர்.

நாலுகவிப்பெருமாள் என்ற அஸாதாரணமான பிருதம் சூட்டப்பெற்ற பரகாலமஹாயோகி சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய தில்லைத்திருச்சித்திரகூடத்திற்கு எழுந்தருளுகிறார். அந்தப்பரம பக்தசிகாமணியைக்காணும் பேராவாவுடைய அத் திருப்பதியின் எம்பெருமான் கலியனையருளுவதற்காக அப்போதே திருவீதியில் எழுந்தருளுகிறார். நாற்புறமுங் கைங்கர்யபரர்கள் அவரவர்களுக்குரிய கைங்கர்யங்களைச் செவ்வனே புரிந்துவரவும், கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியும், மகரக்குழைகளும், செங்கமல மலர்சூழ்வண்டினம்போலே சுருண்டிருண்ட குழல்களும், செந்தாமரைக்கண்களும், அனங்கன் சிலை போன்று நீண்ட புருவங்களும், கொவ்வைச்செவ்வாயும், மதிமுகமும், வலம்புரிபோன்ற மணிமிடறும், வரையெனவுயர் தோள்களும், அலர்மேன்மங்கையகலா துறைகின்ற மணிமார்பமும், பைந்துழாய் மாலைகளும், வலம்புரியும் ஆழியும் ஒண்தண்டும் பொலி திருக்கரங்களும், அடியடையுமன்பரையன்பினாலஞ்சலென்றருள் அபயகரக்கமலமும், பீதகவாடையுடைய திருவரையும், பிரமனைப் படைத்தவுந்திப்பூவும், உலகளித்த திருவுதரமும், அண்டமுழுதளந்த திருவடிகளும் சுடர்விட்டுவிளங்க வெம்பெருமான் அருள்நோக்கினால் அடியார்களைக் கடாக்ஷித்துக்கொண்டு எழுந்தருளுவதைப் பார்த்தார் கலியன். மனமுருகினார். தன்னினைவிழந்தார். அத்துடன் மற்றையோருக்குக் காண கிடைக்காதவைகளும் கலியனுடையநோக்கங்களுக்கு இலக்காகின்றன. ஸர்வலோகநாயகனாகிய பரம்பொருளின் அர்ச்சாவதாரதசையின் ஸௌலப்யத்தையும், திருமேனி ஸௌஷ்டவத்தையும் உகந்து, நேரிலே ஸேவித்து அநுபவிக்கவெண்ணிய தேவர்களும் நித்யஸூரிகளுங்கூட திருச்சித்திரகூடம் வந்து எம்பெருமானை ஆயிரநாமங்களையும் திருவவதாரத்தின் அருமைபெருமை சீர்மைகளையும், மனமார வாயாரப்பாடியநுபவிக்கிறார்கள். இந்தவெளிமை யவர்களுக்கு அவரவர்களுடைய உலகங்களில் எங்கே கிடைக்கும்? இவையனைத்தையும் நங்கலியன் நேரிலேயே கண்டநுபவிக்கிறார். அது மாத்திரமா? அப்பொழுது அவ்வெம்பெருமானுடைய திருநாமங்களையநுபவிக்குங் கலியன் அப்பெயர்களில் ஒன்றாகிய **கோவிந்தன்** என்ற திருநாமத்தை நினைத்தவுடன் அச்சீரிய திருநாமத்தின்

சிறப்பிலேயே மூழ்கிவிடுகிறார். எம்பெருமானுடைய ஸௌலப்ய குணத்திற்கு எல்லைநிலமான ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ஆர்த்த ஸம்ரக்ஷணம் புரிந்த செல்வச் சேவகத்திற்காகச் சூட்டப்பட்ட அஸாதாரண மஹிமை வாய்ந்த திருநாமமல்லவா அது? இப்படியுன்னியுன்னியுருகி யநுபவிக்குங்கலியன் கலியுகத்தையே கடந்து ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திற்கே போய்விடுகிறார். அவ்வவதார திவ்யசேஷ்டிதங்களையும் அப்போதே நேராகக்காண்கிறார். உலகமெல்லாம் அமுதுசெய்தாலும் திருவயிறு நிறையாத ஸர்வேச்வரன் ஆய்ச்சியர் இல்லங்களில் வெண்ணெயைத் திருடியுண்பதும், அவ்வாய்ச்சியர்களும் பரமனையறியாது தங்கள் குலத்துப்பிறந்த சிறுவனென நினைத்து 'இவன் களவாகிய இழிதொழிலைச் செய்தான்' என்று ஏசவும் நின்ற எளிமையைப் புகழ யாவராலும் ஆகுமோ? என்று வியக்கிறார். பரமஸௌலப்யகாஷ்டைக்கு நிலமான இந்த லீலாம்ருதத்தையுண்ட கலியன், அஸாதாரணமான பரத்வத்திற்கு இடமான இன்னுமோர் லீலையையும் அநுபவிக்கிறார். அதுதான் எத்திக்கிலுள்ளாரும் வீழ்ந்து வீழ்ந்து வணங்கும் பெருமைபெற்ற லீலையாகிய யமளார்ஜுனபஞ்ஜநம் குழந்தைப்பருவத்தில் தாயெனக் கருதியவள் கையால் கட்டப்பட்ட பரமபுருஷன் கட்டுண்ட உரலோடும் தவழ்ந்துசென்று, அந்நிலையிலும் தன் திருவடி ஸ்பர்சம்பட்ட மாத்திரத்தில்; ஒழித்தற்கரிய கடிய சாபம் அடைந்தவர்களைச் சாபம் தவிர்த்து வாழ்வித்த தன்மையையும் கண்டநுபவிக்கிறார் கலியன்.

இப்படிப்பட்ட மஹாபுருஷன் - அண்டம் படைத்துண்டுமிழ்ந்தவன்-அமரர்க்குமெட்டாத ஆழியான்-ஆயனாகியஆதிப்பிரான்; தனது பெருமைகளைத் தளரவிட்டு அர்ச்சாவதாரத்தை ஸ்வீகரித்த எளிமையையும், அதிலும் தனது பெருமையையுணர்ந்தவர் குறைவாகவும் அறியாதார் அதிகமாகவும் உள்ள இச்சித்ரகூடத்தில் வந்து, அறிந்தோ அறியாமலோ தன்னையொருதரம் ஸேவித்தோர்க்கும் நல்வாழ்வு வழங்குவதற்காகத் தனது பெருமையை ஒடுக்கிக்கொண்டு ஓரிடத்தில் உள்ளேயமர்ந்த பரமஸௌலப்யத்தையும் நினைந்து நைந்துருகுகிறார் ஆலிநாட்டுமன்னர்.

அவரது அநுபவம் ஓர் அப்ராக்ருதமான பாசுரமாக அவரது திருவாக்கிலிருந்து திருவவதரிக்கிறது. அந்த அமுதப்பாசுரச்செல்வம் வருமாறு:-

'பண்டிவன் வெண்ணெயுண்டானென்று
ஆய்ச்சியர் கூடிஇழிப்ப
எண்டிசையோடும் வணங்க இணை
மருதூடு நடந்திட்டு
அண்டரும் வானத்தவரும்
ஆயிரநாமங்களோடு
திண்டிறல்பாடவருவான்
சித்திரகூடத்துள்ளானே.'

[அண்டர்-இடையர், தேவர்; வானத்தவர்-தேவர், நித்யஸூரிகள்; திறல்-பெருமை, சீர்மை; சித்திரகூடத்துள்ளான்-சித்திரகூடத்திருப்பவன், சித்திரகூடத்துக்கு உள்ளே இருப்பவன்.]

பரகாலன் பக்திபரீவாஹம் என்னே! என்ன அவர் ஔதார்யம்!

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அஹோபில உத்ஸவம்

‘காஶ்யாம் யாநி ஸஹஸ்ராணி ப்ருத்யாமேவ யாந்தி விம்ஶதி: | ப்ரயாணாம் யாநி ஶதம் வைஷ்ணவ விஶேஷு நாஹோபிலே ||’ என்றபடி காசி முதலியவைகளைவிட அநேக மடங்கு உயர்ந்ததான ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தில் ‘ஜ்வாலாஹோபில மாலோல க்ரோட காரஞ்ஜ பார்கவா: | யோகாநந்த ச்சத்ரவட: பாவநா நவ மூர்த்தய: ||’ என்று ஒன்பது ந்ருஸிம்ஹன் எள்ளியிருக்கிறார்கள். அவர்களில் சத்ரவடன் யோகாநந்தன், பார்க்கவன் இவர்கள் கீழஹோபிலத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள். இவர்களைத்தவிர்த்து ப்ரஹ்லாதவரதன் என்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார். இவர்தான் ப்ரஹ்லாதனை ஸமுத்ரத்தில் தள்ளி பாறையை மூடிய போது எதிரில் தோன்றி ரக்ஷித்தவர். இவருக்குத்தான் கீழ் அஹோபிலத்தில் ப்ரஹ்மோத்ஸவம் நடக்கின்றது. இவர் ஒன்பது ந்ருஸிம்ஹர்களில் சேர்ந்தவரல்லர். வெங்கடாசல மாஹாத்ம்யத்தில் பத்மாவதிக்கும் திருவேங்கடமுடையானுக்கும் திருக்கல்யாணம் நடக்கும் பொழுது பிராட்டி பகவதாராதநபூர்வகம் ததீயாராதநம் பண்ணி தன்னை பாணிக்ரஹணம்பண்ணிக்கொள்ளும்படி நியமிக்க, ஸ்ரீநிவாஸனும் லக்ஷ்மீந்ருஸிம்ஹனை இங்கு எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார் என்றுள்ளது. அதற்கநுகுணமாக இச்சந்நிதியில் ஸ்ரீநிவாஸன் எள்ளியிருக்கிறார். அவர் எழுந்தருளியிருக்கும் மண்டபத்தை கல்யாணமண்டபம் என்று வ்யவஹரிக்கிறார்கள். மேல் அஹோபிலத்தில் ஐந்து ந்ருஸிம்ஹர்களும், மேல் அஹோபிலத்திற்கு போகும்வழியில் சக்ரத்தோடும், சார்ங்கத்தோடும் காரஞ்ஜ ந்ருஸிம்ஹனும் ஸேவைஸாதிக்கிறார்கள். மேலே அஹோபிலந்ருஸிம்ஹனுக்கு ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுகிறது. உத்ஸவர் பத்து புஜங்களோடு ஸேவை ஸாதிக்கிறார்.

மேல்படி ப்ரஹ்மோத்ஸவம் மாசி மீ 20 உ (3—3—52) ஆரம்பிக்கப்பட்டு (12—3—52)ல் நிர்விக்நமாக நன்றாக முடிவடைந்தது. ஸுமார் பதினாயிரம் ஸேவார்த்திகள் வந்திருந்தார்கள். அவ்விடத்தில் நடந்த உத்ஸவ வைகரியையோ, பெருமாளின் ப்ரபாவத்தையோ என்னென்று சொல்வது !

அவ்விடத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் 10 தினங்களும் நடத்தப்படும் ததீயாராதநம் பரத்வாஜாச்ரமத்தில் முன்பு நடந்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸேவித்ததை நேரில் அநுபவிக்கும்படியிருக்கின்றது. காட்டில் நடந்தமையால் பரத்வாஜாச்ரம ஆதித்யம் என்பது மிகவும் பொருத்தமானதே. ஆச்ரமத்துக் கிளிகளைப்போல் திருவள்ளூர் ஆச்ரமத்திலிருந்துவந்தவர்கள் ஸேவார்த்திகளை வரவேற்பது வழியில் உண்டான ச்ரமங்களைப் போக்கிவிடுகின்றன. இப்படி மதுரபாஷணமும் ஷட்ரஸோபேதமான ததீயாராதநமும் செவியையும், நாவையும் என்றும் விட்டகலாது.

மேல் அஹோபிலத்தில் ஐந்தாம் உத்ஸவத்தன்று ராத்ரி ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ சார்யம் ஸ்ரீ. உப. வித்வான் தையார் ஜே. ரங்காசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ. உப. வித்வான் ஸாரஸாரஜ்ஞ சிரோமணி தி. ச. நரஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமியும் செய்தருளின ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரபாவம் என்னும் உபந்யாஸங்கள் அங்கு குழுமியிருந்த பக்தர்களை ஆநந்தக்கடலில் முழுகும்படி செய்தது. இவைகளையநுபவித்த ரஸிகர்கள் ‘வைஷ்ணவாவேஸ்வி நச்ஶ்ரியாஷ:’ என்றார்கள்.

இப்படிக்கு
ஸ்ரீவத்ஸன்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தன௵ சித்திரை௴ 1952௵ ஏப்ரல்-மே௴

[உத்தராயணம்-வஸந்த ருது மேஷ-௴]

13—4—52	1௳	ஞாயிற்றுக்கிழமை	...	சூந்யதிதி. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்) தமிழ் வருஷப்பிறப்பு பண்டிகை.
14—4—52	2௳	திங்கட்கிழமை	...	பஞ்சமிதிதி.
20—4—52	8௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
23—4—52	11௳	புதன்கிழமை	...	● ஸர்வ அமாவாஸ்யை. சதுர்தசி—அமா திதித்வயம்.
24—4—52	12௳	வியாழக்கிழமை	...	ப்ரதமை திதி.
25—4—52	13௳	வெள்ளிக்கிழமை	...	த்விதீயைதிதி.
26—4—52	14௳	சனிக்கிழமை	...	த்ருதீயை திதி.
27—4—52	15௳	ஞாயிற்றுக்கிழமை	...	சதுர்த்தி திதி.
28—4—52	16௳	திங்கட்கிழமை	...	அதிதி.
29—4—52	17௳	செவ்வாய்க்கிழமை	...	பஞ்சமி திதி. திருவாதிரை *ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்.
5—5—52	23௳	திங்கட்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
6—5—52	24௳	செவ்வாய்க்கிழமை	...	த்வாதசி ஹரிவாஸரம் 7-38.
8—5—52	26௳	வியாழக்கிழமை	...	சித்திரை ஸ்ரீ நரஸிம்ஹஜயந்தி. *ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் திருநக்ஷத்ரம்
9—5—52	27௳	வெள்ளிக்கிழமை	...	◯ சித்ராபௌர்ணமி.
12—5—52	30௳	திங்கட்கிழமை	...	மேஷக்ருஷ்ண த்ருதீயை திதி.
13—5—52	31௳	செவ்வாய்க்கிழமை	...	மேஷக்ருஷ்ண சதுர்த்தி திதி. (ரிஷப ரவி 53-27. மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்)

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தா வரவு: 1952-ம் ௵ பிப்ரவரி ௴.

சந்தா எண்		பெயரும் விலாஸமும்	வருஷம்	தொகை ரூ	அ
18	ஸ்ரீ	எம். கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பம்பாய்.	53	3	0
45	,,	எஸ். ரங்காசார்யர், பவநகர்.	52	3	0
134	,,	ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.	52	3	0
136	,,	டி. சேஷஐயங்கார், பெந்தபாடு.	51-52	6	0
144	,,	ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
161	,,	எஸ். திருவேங்கிடாசார்யர், புதுடெல்லி.	52	3	0
165	,,	ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
225	,,	ஏ. மாதவ ஐயங்கார், பெங்களூர்.	52	3	0
269	,,	ஆர். ஸ்ரீநிவாஸகோபாலாசார்யர், புதுக்கோட்டை.	51	3	0
289	,,	வி. எஸ். ரங்காசார்யர், கோயம்புத்தூர்.	52	1	0

		முன்பக்கப்படி ரூ—		31	0
400	,,	வி. வெங்கடராகவ ஐயங்கார், விழுப்புரம்.	49–51	8	0
443	,,	பி. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
448	,,	எஸ். ஆழ்வார் ஐயங்கார், திருநெல்வேலி.	52	3	0
470	,,	ஸி. ஆர். ஸ்ரீநிவாஸபாட்ராசார்யர், கும்பகோணம்.	51–52	3	0
473	,,	வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மாம்பலம்.	52	3	0
486	,,	எம். வி. சாரி, பம்பாய்.	52	3	0
539	,,	ஸம்பத்நாராயணன், திருவல்லிக்கேணி.	52	3	0
544	,,	ஆர். ராமஸ்வாமி ஐயங்கார், கல்யான்.	52	3	0
615	,,	எம். வி. நரஸிம்ஹ ஐயங்கார், கோயம்புத்தூர்.	50–51	6	0
632	,,	கே. ராஜகோபால ஐயங்கார், நெல்லிகுப்பம்.	49–51	9	0
658	,,	எம். ஆர். சாரி, கல்கத்தா.	52	3	0
678	,,	ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்.	52	3	0
686	,,	டி எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தி. நகர், மதராஸ்.	52	3	0
710	,,	ரங்காசார்யர், பெரம்பூர்.	49	3	0
750	,,	ஏ. ரங்காசார்யர், கல்கத்தா.	52	3	0
751	,,	எம். வி. ராமஸ்வாமி ஐயங்கார், திருப்பத்தூர்.	49	3	0
754	,,	டி. வி. ராம ஐயங்கார், திருநெல்வேலி.	52	3	0
776	,,	எஸ். விஜயஸாரதி, தொட்டிபெட்லா.	52	3	0
777	,,	எல். ரங்காராமானுஜாசார்யர், வாணியம்பாடி.	49–51	9	0
800	,,	எஸ். ஆர். ரங்காசார்யர், பெரும்பாக்கம்.	51	3	0
840	,,	எஸ். சேஷாத்ரிநாதன், சிங்கப்பெருமாள்கோயில்.	52	3	0
854	,,	டி. எஸ். சாரங்கபாணி ஐயங்கார், தேன்மருதூர்.	52	3	0
860	,,	கே. ஆர். ஆராவமுதன், பம்பாய்.	52	3	0
861	,,	ஏ. ராஜகோபாலன். பம்பாய்.	52	3	0
879	,,	எஸ். டி. சாரி, பம்பாய்.	52	3	0
895	,,	கே. எம். நரஸிம்ஹாசார்யர், திருவல்லிக்கேணி.	52	3	0
911	,,	கே. ஆர். ஆராவமுது, பம்பாய்.	52	3	0
918	,,	வி. கே. ஜகந்நாதாசார்யர், தாண்டிஸ்டிட்.	51	3	0
923	,,	கே. பி. ஸ்ரீநிவாஸன், தோம்பிவிலி.	51	3	0
938	,,	ஏ. எம். சாரி, ,,	51	3	0
859	,,	எஸ். வீரராகவன், கும்பகோணம்.	55	3	0
997	,,	கே. எஸ். திருநாராயண ஐயங்கார், நீடாமங்கலம்.	52	3	0
1001	,,	பி. ராகவன், பம்பாய்.	51–52	6	0
1003	,,	எஸ். சேஷாத்ராசார்யர், கல்யான்.	51	3	0
1028	,,	எஸ். ராகவன், சிந்தாத்ரிபெட்.	51–52	3	0
		ஆக ரூ—		159	0

Regd. No. M. 4437

MADRAS

		முன்பக்கப்படி ரூ—		159	0
1029	ஸ்ரீ	கே. ஸந்தானம் ஐயங்கார், திருத்துறைப்பூண்டி.	52	3	0
1032	,,	எ. ஆர். லக்ஷ்மீநரஸிம்ஹ ஐயங்கார், தஞ்சாவூர்.	52	3	0
1040	,,	கே. கஸ்தூரிரங்க ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
1041	,,	கே. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
1061	,,	சேஷாத்ரி ஐயங்கார், நரஸாபூர்.	52	3	0
1069	,,	ஸி. வி. எஸ். தாதாசார்யர், ஸ்ரீரங்கம்.	52	3	0
1075	,,	டி. ஜே. அநந்தாசார்யர், ஸ்ரீரங்கம்.	52	3	0
1081	,,	எஸ். ரகுநாத ஐயங்கார், கும்பகோணம்.	52	3	0
1089	,,	எஸ். ரங்காசார்யர், ஸ்ரீரங்கம்.	52	3	0
1104	,,	டி. ஆர். நரஸிம்ஹாசார்யர், கொடவாசல்.	52	3	0
1135	,,	பி. ஆர். ராகவ ஐயங்கார், புதுக்கோட்டை.	52	3	0
1147	,,	கே. எ. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார், தஞ்சாவூர்.	52	3	0
1152	,,	எஸ். வி. வரதாசார்யர், மதனபல்லி.	51-52	3	0
1202	,,	ஜீ. கிருஷ்ணமாசார்யர், தெள்ளகுளம்.	52	3	0
1205	,,	பி. வி. எஸ். வரதாசார்யர், பருத்திப்பட்டு.	52	3	0
1206	,,	ராஜகோபாலாசார்யர், திருப்புல்லாணி.	52	3	0
1207	,,	ஆர். கிருஷ்ணமாசார்யர், பெங்களூர்.	52	3	0
1208	,,	வி. விஜயராகவாசார்யர், எசயனூர்.	52	3	0
1209	,,	எம். எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கோயம்புத்தூர்.	52	3	0
1210	,,	கே. நரஸிம்ஹன், டால்மியாபுரம்.	52	3	0
1211	,,	கே. சேஷாத்ரி ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	52	3	0
1212	,,	டி. ஆர். பிச்சு ஐயங்கார், திருக்குறுங்குடி.	52	3	0
1213	,,	ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ,,	52	3	4
1214	,,	என். ரங்கநாதன், கல்கத்தா.	52	3	0
1215	,,	கே. ஆர். விஜயராகவன், எழும்பூர்.	52	3	0
1216	,,	வி. ராஜகோபாலாசார்யர், மேலையாங்குளம்.	52	2	0
1217	,,	ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், St Thomas Mt.	*52*	*3*	*0*
1218	,,	ஜீ. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ,,	52	3	0
1219	,,	ஸௌந்தரராஜ தாதாசார்யர், லக்ஷ்மீபுரம்.	52	3	0
1220	,,	எ. ஸி. பாவனாசார்யர், பழையமாம்பலம்.	52	3	0
1221	,,	எஸ். நாராயண ஐயங்கார், குடியாத்தம்.	52	3	0
		ஆக மொத்தம் ரூ—		251	4

Printed by J. RANGACHARIAR, Srikaryam, Sri Ahobila Mutt, at Malola Press, 30, Panagal Street, Tiruvallore.
Edited and Published by P. S. SrinivasaDesikaachariar, M.A., B.L., No. 2, Audiyappa Mudali Street, Vepery, Madras 7.